Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 335
தேசிய தினசரி

...ணம் இலங்கை ஐப்பசி 18 ஷஃபான் 1 சனிக்கிழமை [4-11-67]

## முல்லைத்தீவில் மூவாயிரம் கூப்பனுக்கு 30 நெஸ்பிறே டின்கள்

முல்லைத்தீவு, வெள்ளி

மூவாயிரம் கூப்பன்கள் கொண்ட முல்லைத்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 30 நெஸ்பிறே ஒரு றாத்தல் டின்கள் மட்டுமே வழங்கப்பட்டனவாம்.

மூவாயிரம் கூப்பன்காரருக்கு 30 நெஸ்பிறே டின்களை எப்படி விநியோகிப்பதென்பது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் பெருத்த தலையிடியை ஏற்படுத்தியதாம்.

எனினும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள் நிலைமையைச் சமாளித்து 30 பால் மா டின்களையும் வழங்கினார்கள்.

பல கூப்பனுள்ள பெற்றோர்கள் தமக்கு நெஸ்பிறே கிடைக்காததால் பெருத்த அதிருப்திக்குள்ளாகியிருப்பதாகத் தெரிகிறது.

வவுனியா எம். பி.யிடம் சில பெற்றோர்கள் புகார் செய்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

# யாழ்ப்பாண மாநகரசபைக்கு 3 மாதத்தில் தேர்தல் நிச்சயம்

## சர்வாதிகாரம் என்பதற்கு இடமே கிடையாது

### அமைச்சர் திருச்செல்வம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், சனி

**யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய தேர்தல் இன்னும் மூன்று நான்கு மாதங்களுக்குள் நடைபெறுவது நிச்சயமென்றும் அதுவரை யாழ்ப்பாண மாநகரசபையின் நிர்வாகத்தை இப்போது நடத்தி வரும் விசேஷ ஆணையாளர்களுக்கு யாழ்ப்பாண நகரமக்கள் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்க வேண்டுமென்றும் உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் நேற்று மாலை யாழ்ப்பாண நகரமக்களைக் கேட்டுக்கொண்டார்.**

யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறையில் குழாய் நீர் விநியோகத் திட்டத்தை அமைச்சர் திருச்செல்வம் நேற்றுப் பிற்பகல் ஆரம்பித்துவைத்தார். இந்த வைபவத்தில் அமைச்சர் மிகச் சுருக்கமாகப் பேசினார்.

யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய தேர்தல் இன்னும் மூன்று நான்கு மாதங்களுக்குள் நிச்சயம் நடைபெறும் என்று அமைச்சர் தெரிவித்தார். இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் யாவும் ஜனநாயக முறையிலேயே நடைபெறுகிறதென்றும் சர்வாதிகாரம் என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் அமைச்சர் சொன்னார். யாழ்ப்பாண மாநகர சபைக்கு புதிய தேர்தல் நடைபெறும்வரை நகரின் சீர்திருத்தத்துக்காக விசேஷ ஆணையாளர்களுக்கு மக்கள் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் அளிக்கவேண்டும் என்று யாழ்ப்பாண நகர மக்களை அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

கொழும்புத்துறைக்கு 1956-ம் ஆண்டில் தாம் திரு. மார்ட்டினுடன் வந்தபோது குடிநீர்ப்பிரச்னையை அறிந்து கொண்டதாகவும் இன்று அந்தப் பிரச்னைக்கு தீர்வு கிடைத்ததையிட்டுத் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் அமைச்சர் கூறினார்.

உள்ளூராட்சிசேவை உதவி ஆணையாளர் திரு. எஸ். ஸி. மாணிக்கவாசகரும் பேசினார்.

### பெற்றோல் ஆராய்ச்சி முகாம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

வடபகுதிக் கரையோரங்களில் பெற்றோல் ஆராய்ச்சி நடத்தும் பிரான்ஸ் நிபுணர்கள் கீரிமலையில் முகாம் அமைத்து இங்கிருந்து பல இடங்களுக்கும் வான், ஜீப் மூலம் சென்று ஆராய்ச்சி நடாத்தி வருகின்றனர்.

## யு. என். பி. யிலிருந்து திருமாத்தியூ ராஜினமா

### கோஷ்டிப்பூசல் காரணமா?

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர்களில் ஒருவரும் இருபது வருடங்களாக அதனுடன் உறவு கொண்டிருந்தவருமான கொலன்னை எம் பி திரு. சிறில் மாத்தியூ ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாகத் தெரிவித்து தமது ராஜினமாவை கட்சியின் தலைவரும் பிரதமருமாகிய திரு. டட்லி சேனநாயகாவுக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கோஷ்டிப் பிரிவினை ஏற்பட்டுள்ளதாகவும் பிளவுபட்ட ஒரு கட்சியினால் நாட்டைச் சரியான முறையில் ஆட்சி செய்ய முடியாதெனவும் தாம் கருதுவதாகவும் திரு. மாத்தியூ தமது ராஜினமாக் கடிதத்தில் தெரிவித்திருந்தாராம்.

ஆனால் திரு. மாத்தியூ தமது ராஜினமாவை இன்று காலை வாபஸ் பெற்றுக் கொண்டதாக ஒரு செய்தி கூறுகிறது. அவர் இன்னும் ராஜினமாவை வாபஸ் பெறவில்லையென்றும் வாபஸ் பெறச் செய்வதற்காக அவரது நண்பர்கள் முயற்சி செய்துவருவதாகவும் மற்றொரு செய்தி கூறுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியில் டட்லி கோஷ்டி ஜே. ஆர். கோஷ்டி என இரு கோஷ்டிகள் ஏற்பட்டு இரண்டுக்குமிடையில் போட்டி அதிகரித்துவருவதே திரு. மாத்தியூவின் ராஜினமாவுக்குக் காரணம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

## பால் உணவு இறக்குமதியை அரசாங்கம் ஏற்கும்?

கொழும்பு, வெள்ளி

பால் உணவுப் பொருள்களின் இறக்குமதியை அரசாங்கமே மேற்கொள்வதா அல்லது பால் உணவுப் பொருள்களின் விநியோகத்தை அரசாங்கம் ஏற்பதா என்பதுபற்றி நாளை சனிக்கிழமை மந்திரி சபை முடிவு செய்யவிருக்கிறது.

அரசாங்கக் கட்சிக்குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 'அலரிமாளிகை'யில் நடைபெற்றபோது பால் உணவுப் பொருள்களின் கட்டுப்பாடு பற்றியும் பால் உணவுப்பொருள்களின் விற்பனை, விநியோகம் ஆகியவற்றில் 'மோசடி' நடைபெறுவதுபற்றியும் அங்கத்தவர்பலர் கண்டனம் தெரிவித்தனர். பால் உணவுப் பொருள் இறக்குமதி விற்பனை, விநியோகம் ஆகியவைகளை அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் என்று பலர் யோசனை தெரிவித்தனர்.

இதுபற்றி நாளை நடைபெறும் மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும் என்று பிரதமர் தெரிவித்தார்.

## எம். ஜி. ஆர் - ராதா வழக்கு இன்று தீர்ப்பு

சென்னை, நவ. 3

சினிமா நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஆர். ராதா துப்பாக்கிச் சூட்டு வழக்கு தீர்ப்பு நாளை வழங்கப்படும். சென்னை செஷன்ஸ் கோர்ட் நீதிபதி திரு. லக்சுமணன் இந்தத் தீர்ப்பை நாளைக்காலை வழங்குவார்.

சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைச் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்ய எத்தனித்ததாகவும் மற்றொரு சினிமா நடிகரான எம். ஆர். ராதாமீது இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்

[8-ம் பக்கம் பார்க்க]

ஜி. ஸி. ஈ. தமிழ்மொழி 'அ' பாடத்திட்டத்துக்கான மாதிரி வினாக்களை 6-ம் பக்கத்தில்பார்க்க.

## 'சைவசமயத்தை தமிழர் புறக்கணிக்கின்றனரே'

### உதவி அரசாங்க அதிபர் கவலை

குரும்பசிட்டி, வெள்ளி

"நமது நாடு சுதந்தரம் பெற்ற பின்னர் பௌத்த-கிறிஸ்தவ-இஸ்லாமிய சமயங்கள் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளன. ஆனால் சைவசமயம் பின்தங்கிய நிலையில் இருப்பது குறித்து மக்கள் எல்லோரும் மிகத் துக்கமடையவேண்டும். தமிழ் மக்கள் சமயத்திலும் பார்க்க விஞ்ஞானத்திற்கு அதிக மதிப்புக் கொடுக்கின்றனர். மெய்ஞானத்தை புறக்கணித்து விஞ்ஞானக் கல்வியைப் போதிக்கப் பெற்றோர் விரும்புகின்றனர். தொழில், உழைப்பு, ஊதியம் பெறவே இவ்வாறான நடவடிக்கைகளில் இறங்குகின்றனர். இறைவனை அடையக்கூடியதான கல்வியின் குறிக்கோள் அமையவேண்டும். சுமார் 150 ஆண்டுகளாக அந்நியரால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த நாம் தற்போதைய

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "புவியியல் விஞ்ஞானிகள் தோன்ற அரசாங்கம் கவனமெடுக்கவேண்டும்"

## கருத்தரங்கில் விரிவுரையாளர்

உடுப்பிட்டி, வெள்ளி

"மேல்நாடுகளில் மாணவர்கள் டெலிவிஷன் மூலமும், கல்விச் சுற்றுலா மூலமும் தமது கல்வி சம்பந்தமான தகவல்களை நேரில் அறிந்துகொள்ளுகிறார்கள். இதனால் மாணவர்களின் கல்வியறிவு பெருகுவதோடு செயல்திறமையுடன் ஆர்வமும் பெறுகிறார்கள். இன்று உலகிலே விஞ்ஞானம் முதன்மைபெற்று விளங்குவதற்குக்காரணம் புதுமைகள் பல நிகழ்வதுதான். புவியியலும் ஒரு விஞ்ஞான பாடம் என்பதே ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். ஆதலால் நம் மாணவர்கள் பூமி சாஸ்திரம் முதலிய கலைகளை ஆராய்ச்சிகளின் மூலமே பூரணமாகக்கற்கவும், புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்யவும் முடியும். இதற்குக் கருத்தரங்கங்களும், கண்காட்சிகளும் இன்று ஓரளவு பயனளிக்கின்றன. அரசாங்கம் போதிய கவனமெடுத்தால் விரைவில் இலங்கையிலும் புவியியல் விஞ்ஞானிகள் பலர் தோன்றக்கூடும்"

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய புவியியல் மாணவர் மன்றக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட புவியியல் விரிவுரையாளர் திரு. டபிள்யு. ஆர். அருளையா பேசுகையில் கூறினார். செல்வி புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கைச் செல்வி கே. ரஞ்சினி ஆரம்பித்து வைத்தார்.

இக்கருத்தரங்கில் நடைபெற்ற போட்டியில் 'அத்துளுநீர்த்திட்டம்' பற்றிய ஆராய்ச்சிச் சொற்பொழிவை நிகழ்த்திய செல்வன் கே. இராமச்சந்திரன் முதலிடம் பெற்றார்.

## குடியேற்றக் காணிக்கு போகப்பாதையில்லை"

புதுக்குடியிருப்பு, வெள்ளி

முத்தையன்கட்டுக் குளத் திட்டத்தின்கீழ் குடியேற்றக் காணிகளுக்கு போவதற்கு பாதையில்லாமலிருக்கிறது. வழமையாய் இருந்த பாதை நிலத்தை குடியேற்றவாசிகளுக்குக் காணியாகக்கொடுத்ததால் இருந்த பாதையைமறித்து வேலிபோட்டு விட்டதால் அதற்குமேல் போகவேண்டியவர்கள்வண்டி கொண்டு செல்வதற்கோ ஆட்கள் போவதற்கோ வசதியில்லாமல் அவதிப்பட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

**பயிர் அழிவு**

முத்தையன்கட்டுக் குளத்தின்கீழ் குடியேற்றத்திட்டஅடிப்படையில் கொடுக்கப்பட்ட காணிகளில் சில குடியேற்ற வாசிகள் நெல் வேளாண்மைசெய்து பயிரை பாதுகாக்க கம்பி கொடுக்காததால் மாடு முதலியனவால் அழிவுஏற்படுகின்றன.

குடியேற்ற வாசிகள் இத் திட்டத்தின்கீழ் மிளகாய்க்கன்று நடவேண்டியதாம். அதைமீறி நெல்விதைத்தால் குடியேற்ற மேலதிகாரிகள் கம்பிகொடுக்கமறுக்கின்றனராம். குடியேற்றவாசிகள் கம்பி அடிப்பதற்கு கட்டைகளும் நட்டுவிட்டு கம்பி கொடுக்காததால் இவ்வழிவு ஏற்படுகின்றன.

## "நீந்தத் தெரிந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம்"

### இளைஞருக்கு மரணவிசாரணைஅதிகாரிபுத்திமதி

ஊர்காவற்றுறை, வெள்ளி

"நீச்சல் பழக்கம் மாணவர்களுக்கு ஓர் அத்தியாவசியமான பயிற்சியாக அமைய வேண்டும். அவ்விதம் அமைந்துஇருந்தால் இவ்வயோதிய விதவை தனது உயிரை வீணகஇழக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு இருக்காது."

இவ்வாறு அனலைதீவு வாசியான வேலன் கைம்பெண் சின்னத்தங்கம் அங்குள்ள கற்காட்டுக் குளத்தில் நீராடும்போது மூழ்கிமரணமானதை விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு. பி. கதிரவேலு விசாரணைமுடிவில் தெரிவித்தார்.

மரணவிசாரணையின் போது சின்னத்தங்கம் நீராடும் போது அவரின் பேரனான பதினெட்டு வயது வாலிபன் தூரத்தில் நின்று அவர் நீரில் தத்தளிப்பதைக்கண்டதாகவும் அவ்வாலிபன் நீந்தத்தெரியாததால் அபயக்குரல் எழுப்பி தனது தகப்பனாரை வருவித்தார் என்றும் அதற்கிடையில் சின்னத்தங்கம் நீரில் மூழ்கி மரணமானார் என்றும் கூறப்பட்டது.

நீரில்மூழ்கி மரணம் சம்பவித்தது என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## கிராம சபை கோரிக்கை

சுழிபுரம், வெள்ளி

பண்ணாகம் உபதபால் கந்தோர் தபால்கட்டும் நேரத்தை தினமும் நான்கு மணிவரையாக்கித் தரும்படி தபால்மா அதிபரை கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று சுழிபுரம் கிராம சபை மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்ணாகம் உபதபால் கந்தோர் தபால் கட்டும் நேரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டதால் பொதுமக்கள் தினமும் அவதிக்குள்ளாக்கப்படுகின்றனரென்றும், போதியளவு நேரவசதிகள் தபால் கட்டப்பட்ட பின்னர் உள்ளன என்பதையும் சுட்டிக்காண்பித்துள்ளனரென்றும் கூறும் அத்தீர்மானத்தின் பிரதிகள் சம்பந்தப்பட்ட ... பட்டுள்ளன.

## நெல்லியடி வித்தியாலயத்துக்கு 5 பரிசுகள்

உடுப்பிட்டி, வெள்ளி

வல்வை சிதம்பராக் கல்லூரியில் நடைபெற்ற புவியியற் கருத்தரங்கின் போது வடமராட்சியைச் சேர்ந்த பல கல்லூரிகளிலுமிருந்து மாணவர்களால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புவியியல் படப்போட்டியில் மொத்தம் 10 பரிசுகளில் 5 பரிசுகளை நெல்லியடிமத்திய மகாவித்தியாலயம் சுவீகரித்துக் கொண்டது.

இப்புவியியல் படப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமாணவர்களான செல்வன்கள் செ. யோகராசாவும், த. சுந்தரலிங்கமும் முறையே 1-ம், 2-ம் பரிசுகளையும், மற்றும் எட்டு ஆறுதல் பரிசுகளில் மூன்றை முறையே செல்வி ஆனந்தசரோஜினியும், செல்வன் கெங்காதரனும், செல்வன் யோகராசாவும் பெற்றுக் கொண்டனர்.


## விளம்பரம்

### நீர்வேலி - கிராமசபை விளம்பரம்

மேற்படி கிராமசபையின் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு 1968-ம் ஆண்டுக்கு தேவையான மருந்துவகைகளுக்கு விலைப்பட்டியல்கள் அழைக்கப்படுகின்றன. விலைப் பட்டியல்கள் யாவும் 20-11-67க்குமுன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இ. அப்பாத்துரை
தலைவர்
கி. ச. நீர்வேலி.
307

### பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை கூட்டுத் தாபனம் பரந்தன்

பதிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரிகள்

மேற்கூறப்பட்ட கூட்டுத்தாபனத்துக்கு பண்டகப் பொருட்கள் கொடுக்கும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தனிப்பட்டவர்களையும் ஸ்தாபனங்களையும் பதிவு செய்தல்.

மேற்கொண்டு விபரங்களுக்கு 1967 நவம்பர் 17க்குமுன் கீழ்கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பிக்கவும்.

பதிவு உற்பத்தி அதிபர்.
திகதி: 3-11-67.
311

### மனோகரா

யாழ்ப்பாணம்
மாலை 6-30,
இரவு 9-30 மணிக்கு.
சோபனசித்தி
SOBANASITHA
(சிங்களம்)

7-11-67 முதல்
பிற்பகல் 2-30, மாலை 6-30, இரவு 9-45 மணிக்கு
தேவானந், சைராபானு, சசிகலா நடித்த
பியார் மொகபாட்
PYAR MOHABBAT
ஈஸ்மன் கலர்
இசை:- சங்கர், ஜெயகிஷர்

### REGAL JAFFNA

Daily at
4-45 7-00 And
9-45 p. m. Only
Rod Taylor
in
THE LIQUIDATOR
Panavsion Color

### நியூ காலிங்கன்

[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ரவிச்சந்திரன்- ஜெயலலிதா நடித்த
குமரிப்பெண்

### இப்பொழுது நடைபெறுகிறது

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-20, இரவு 9-30 மணிக்கு
பிளாஸா [வெள்ளவத்தை] கெப்பிட்டல் [கொழும்பு]
மைலன் [கொட்டாஞ்சேனை]
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மற்றும் நாலு திரைகளில்

எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!
கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்



ஜெயலலிதா, ஜெய்ந்தி
நம்பியார், அசோகன்,
நாகேஷ், ஸ்ரீராம்,
மனோரமா,
பி. கே. சரஸ்வதி
நடித்த

தேவர் பிலிம்ஸ்

# முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்
இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

### 6-வது வாரம்

கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] லக்ஷ்மி [கரவெட்டி]
ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி நடித்த
ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற
குழந்தையும் தெய்வமும்

## வரி விளம்பரம்

### தேவை

ஸ்ரோஸ்கிப்பர்:
அனுபவம்வாய்ந்த கணக்கு எழுதக்கூடிய ஸ்ரோஸ்கிப்பர், சங்கத்திற்கு உடனே தேவை. ஆங்கில அறிவு விரும்பப்படும். தொடர்புகொள்க: 30, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2299

### விற்பனைக்கு

காணிகள் விற்பனைக்கு:
புங்குடுதீவு மடத்து வெளியிலுள்ள வீடும் அதனடங்கிய வயல்களும், கம்புளியன் இறுபிட்டி-நாவத்தாள் ஆகிய நெல்வயல்களும் விற்பனைக்குண்டு. உடனடியாக தொடர்பு கொள்ளவும்: S. ஆறுமுகம், 7-ம் வட்டாரம், புங்குடுதீவு. 2101

### வைத்தியம்

சகலவிதமுறிவுவைத்தியங்கட்கும், வாதம், தொய்வு, சிரங்கு, தலைமுடி உதிர்தல், சிறுபிள்ளைகளின் சகலநோய்கட்கும் பலவருடங்கள் அனுபவம்பெற்ற வைத்தியரால் சிறந்த முறையிலும், பெண்மணிகளுக்கு பெண் வைத்தியரால் சிகிச்சை அளிக்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். ஆயுள்வேத வைத்தியசாலை, நாயன்மாரிகட்டு, 160, ஆஸ்பத்திரிவீதி, ராஜா கட்டிடம். பெரிய கடை யாழ்ப்பாணம். 2276

### காணவில்லை

கூப்பன்
வேலன் கனகம்மா என்ற பெயருடைய கூப்பனும் அத்துடன் இன்னும் நாலு கூப்பன்களும் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2102


## வாலிப முன்னணி ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி தொகுதி தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணியின் ஆண்டுவிழா இம் மாதம் 8-ம் தேதி மிருசுவில் சந்தைமைதானத்தில் பரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமையில் நடைபெறும்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள். அன்றையதினம், மட்டுவில், மீசாலை, வரணி ஆகிய இடங்களில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்வாலிபமுன்னணிக் கிளைகளை ஆரம்பித்து வைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதந்தரித்த அந்நியதுருப்புகள் கொங்கோவினுள் பிரவேசித்தன

## உஷார் நிலையில் கொங்கோ துருப்புகள்

கின்ஷாஷா நவ. 3

**கொங்கோவுக்குள் போர்த்துக்கேய அங்கோலாவிலிருந்து ஆயுதந்தரித்த கோஷ்டி ஒன்று பிரவேசித்துள்ளதாகக் கின்ஷாஷா ரேடியோ அறிவித்துள்ளது.**

**இது பற்றி ஐக்கிய நாடுகள் பந்தோபஸ்து சபையில் புகார் செய்யும்படியும், ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை ஸ்தாபனத்துக்கு அறிவிக்கும்படியும் கொங்கோ அதிபர் ஜெனரல் மொபுட்டு தனது வெளியுறவு மந்திரி திரு. பொம்போக்கோவை கேட்டுக் கொண்டுள்ளார்.**

ஆயுதந்தரித்த கோஷ்டி, கட்டாங்காவுக்குள் பிரவேசித்து விட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போர்த்துக்கேய அங்கோலாவிலிருந்து கொங்கோவுக்குள் ஆயுதந்தரித்த துருப்புகள் வந்துள்ள செய்திகள் ஊர்ஜிதம் செய்யப்பட்டதும், ஐ. நா. பந்தோபஸ்து சபைக் கூட்டத்துக்கு கொங்கோ விண்ணப்பிக்குமெனக் கொங்கோ வெளியுறவு மந்திரி திரு. பொம்போக்கோ தெரிவித்தார்.

### ஆச்சரியமல்ல

ஆயுதந்தாங்கிய கோஷ்டியினர் கொங்கோவுக்குள் பிரவேசித்துள்ளது, ஆச்சரியந்தரும் விஷயமல்லவெனக் கொங்கோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மொபுட்டுவின் ஆட்சிக்கெதிராக இப்படியானதொரு சதித்திட்டம் உருவாக்கப்பட்டு வந்தது பற்றி முன்னரே தமக்குத்தகவல்கள் கிடைத்து வந்ததாக அவை கூறுகின்றன.

ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்த துருப்புக்கள், போர்சுக்கலின் தலைநகரான லிஸ்பனில் கூடி, அங்கிருந்து அங்கோலாவுக்கு விமான மூலம் வந்ததாகத் தெரிகிறது.

### வாஷிங்டனில் கவலை

இச்செய்தியையிட்டு வாஷிங்டனிலுள்ள அமெரிக்க ராஜாங்கஇலாகா அதிகாரி ஒருவர், ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார். ஆயுதந்தாங்கிய துருப்புகள் இவ்விதம் பிரவேசித்திருப்பது, கொங்கோவின் அமைதிக்குப் பெரும் தீங்கு விளைக்குமென அவர் தெரிவித்தார். இத்தகைய நடவடிக்கைக்கெதிராகப் போர்ச்சுக்கலை அமெரிக்கா ஏற்கனவே எச்சரித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஏற்பட்டுள்ள நிலைமையை எதிர்நோக்கிக் கொங்கோத் துருப்புகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகக் கின்ஷாஷா ரேடியோ அறிவித்துள்ளது. ஒருபட்டினம், அந்நிய கோஷ்டியின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன.

# பத்து வருடத்தில் 13,577 பேர்

## தென்வியட்னுமில் கொல்லப்பட்டனர்

வாஷிங்டன், நவ. 3

பத்து வருட காலத்தில், 13,577 தென் வியட்னும் சிவிலியன் மக்களைக் கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகள் கொன்றுள்ளதாகஅமெரிக்க ராஜாங்க இலாகா அறிவிக்கின்றது.

இதே கால கட்டத்தில், 43,469சிவிலியன்களை வியட்காங்கியர்கடத்திச்சென்றுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

---

## இந்திய-பாகிஸதான் தந்தி தொடர்புகள்

புதுடில்லி, நவ. 3

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையேயான தந்தி, தொலைபேசித் தொடர்புகளை நவீன 'மைக்ரோ' அலை முறைப்படி இணைப்பது பற்றி, இரு நாடுகளையும் சார்ந்த நிபுணர்கள், விரைவில் ஆராயவிருக்கிறார்கள்.

இந்நவீனமுறை, இருநாடுகளுக்குமிடையேயான தந்தி, தொலைபேசித் தொடர்புகளுக்கு மேலும் சக்தியூட்டுவதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## நைஜீரியாவில் பலத்த சண்டை

லாகோஸ், நவ. 3

கிழக்கு நைஜீரியாவில், பிரிவினை 'பியாவ்ரா' துருப்புகளை அடக்குவதில் ஈடுபட்டுள்ள சமஷ்டி நைஜீரியத் துருப்புகளுக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டுவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முக்கிய பட்டினமொன்றாகிய என்கலாகுவைப் பிடிப்பதில் முனைந்துள்ள சமஷ்டித் துருப்புகளுக்கும் 'பியாவ்ரா' துருப்புகளுக்குமிடையே பலத்த சண்டை நிகழ்வதாகவும் அவை கூறுகின்றன.

---

## இரு ஜெர்மனிகள்பற்றி டிட்டோ

பெல்கிரேட், நவ. 3

''ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு என்றபெயரில் மற்றொரு ஜெர்மனி இருக்கிறது என்ற உண்மையை மேற்கு ஜெர்மனி விரைவில் அங்கீகரித்து அதனுடன் உறவுகளை ஸ்தாபித்துக்கொள்ளும் என்று நம்புகிறேன்'' என்று யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோ கூறியுள்ளார்.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுடன் இராஜதந்திர உறவுகளைக் கொண்டிருப்பதில் யூகோ மகிழ்ச்சியடைகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

---

## கிரேக்க வெளியுறவு மந்திரி ராஜினமா

அதென்ஸ், நவ. 3

கிரேக்க வெளியுறவுமந்திரி, தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்துவிட்டார். தேகாரோக்கிய காரணங்களைமுன்னிட்டே அவர் தமதுராஜினமாவைச்சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய மந்திரி ஒருவரை நியமிக்கும் வரை, வெளியுறவு மந்திரியின் பொறுப்பை [illegible] கிரேக்க பிரதமரே ஏற்றுக் கொண்டுள்ளார்.

# ஆபிரிக்காவில் ஆக்கிரமிப்பை வளர்ப்பதாக குற்றச்சாட்டு

## போர்ச்சுக்கல்மீது இந்தியா சுமத்துகிறது

போர்ச்சுக்கலுடன் வர்த்தகத் தொடர்புகளை முற்றாக முறித்துக் கொள்ளும்படி, ஐ. நா. உத்தரவாதக் கமிட்டியில் பேசிய இந்தியப் பிரதிநிதி திரு. மிஸ்ரா, சகல நாடுகளையும் கோரியுள்ளார்.

ஆபிரிக்கக் கண்டத்தில் போர்ச்சுக்கல் ஆக்கிரமிப்பை வளர்ப்பதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

போர்ச்சுக்கலின் ஆதிக்கத்திலுள்ள பல ஆபிரிக்கப் பிரதேசங்களிலும்விடுதலைப் போராட்டம் நடைபெற்று வந்தபோதும், ஆபிரிக்க மக்களை அடிமைப்படுத்தும் தனது கொள்கையைப் போர்ச்சுக்கலிலுள்ள சலஸார்ஆட்சி கைவிடும் நோக்கம் கொண்டுள்ளதாகத் தெரியவில்லை என்று திரு. மிஸ்ரா கூறினார்.

போர்ச்சுக்கலை, அதன் பிழையான போக்கிலிருந்து தடை செய்ய, அதன் நண்பர்களால் முடியுமென மலேஷியப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

# தென் அரபிய சமஷ்டியிலிருந்து பிரிட்டன் விலகுகிறது

## இம்மாத முடிவில்

லண்டன், நவ. 3

தென் அரபிய சமஷ்டியிலிருந்து இம்மாதம் பிரிட்டன் விலகத் தீர்மானித்துள்ளது. இத்தகவலை, பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அறிவித்தார்.

அடுத்த ஜனவரிமாத முற்பகுதியில் சுதந்திரம் அளிக்கப்படவிருந்த தென் அரபிய சமஷ்டிக்கு, இம்மாதப் பிற்பகுதியிலேயே சுதந்திரம் கிடைக்கவிருக்கிறது.

தென் அரபிய சமஷ்டியிலுள்ள சுமார் 6,000 பிரிட்டிஷ் துருப்புகள் அங்கிருந்து லண்டனுக்குக் கொண்டு வரப்படும். இத்துருப்புகளை லண்டன் கொண்டுவருவதற்கென, ஒரு பெரிய விமானமும், 6 போர்க் கப்பல்களும் தென் அரபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இனி, தென் அரபிய சமஷ்டியில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு, அங்குள்ள தேசியக் கட்சிகளைச் சார்ந்ததாகும் என்று பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. பிரவுண் தெரிவித்தார்.

---

## 500வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்

சைகோன், நவ. 3

வியட்னுமில், ஒரேயொரு சண்டையில் மட்டும், 500 வியட்காங்கியர் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

<u>இரண்டாவது</u>

# ரஷ்ய விண்வெளிக் கலமும் பூமிக்கு இறக்கப்பட்டது

மாஸ்கோ, நவ. 3

விண்வெளியில் இணைந்த இரண்டு ரஷ்ய விண்வெளிக் கலங்களில் இரண்டாவதான கலத்தைக் குறிப்பிட்ட இடத்தில் இறங்கச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது விண்வெளிக் கலம், இரண்டு தினங்களுக்குமுன் பூமிக்கு இறக்கப்பட்டது.

### நோக்கம் நிறைவேறியது

எந்த நோக்கங்களுக்காக இந்த இரு விண்வெளிக் கலங்களும் விண்வெளிக்கு அனுப்பப்பட்டனவோ, அந்த நோக்கங்களை அவை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

### 50 வது புரட்சி தினவிழா

இதற்கிடையில் நேற்று மாஸ்கோவில், ரஷ்யாவின் 50-வது புரட்சிகர தின நிறைவு விழா ஆரம்பமாகியது. அவ்விழாவின் முதற்கட்டமாக, லெனினின் உருவச் சிலை ஒன்று, கிரெம்ளின் மாளிகையில் திறந்துவைக்கப்பட்டது.

# பலாத்காரம் வேண்டாம் என்கிறார் நாகாப் பிரதமர்

கொஹிமா, நவ. 3

நாகாலாந்துப் பிரதமர் திரு. அங்காமி, பலாத்காரத்தைக் கைவிடுமாறு தமது மக்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

நேற்று காஹனுார் என்னுமிடத்தில், மகாத்மா காந்தி கண்காட்சி விழாவென்றில் பேசுகையில், பலாத்காரக் கொள்கை எவ்வித பயனுமளிக்காது என்றும், காந்தி போதித்த அகிம்சையையே மக்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

---

## பீங்கான் உற்பத்தியில் ஒரு புரட்சி

பெர்லின், நவ. 3

ஐரோப்பாவிலே மிகப் பெரிய பீங்கான் தொழிற்சாலை ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் இருக்கிறது. இது விரைவில் விஸ்தரிக்கப்படும். ஆண்டுதோறும் 15,000 தொன் பீங்கான் கோப்பைகள் இதில் உற்பத்திசெய்யப்படுகின்றன.

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள 133 பீங்கான் தொழிற்சாலைகளில் சுமார் 30,000 தொழிலாளர் வேலை செய்கின்றனர். பீங்கான் உற்பத்தியில் பாதி 60 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

---

## பிரிட்டனும் ஐ. அ. கு. வும்

லண்டன், நவ 3

ஐக்கிய அரபுக் குடியரசுடன் பிரிட்டன் மீண்டும் ராஜிய உறவுகளை வைத்துக் கொள்ளுமென்ற நம்பிக்கையை பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

பிரிட்டனுக்கும் ஐ. அ. கு. வுக்குமிடையே, 1965-ம் ஆண்டில், ரொடீஷிய விவகாரத்தையொட்டி, ராஜிவ உறவுகள் முறிவடைந்தன.

### பந்தோபஸது சபை கூடுகிறது

நியூயோர்க், நவ. 3

ஐ. நா. பந்தோபஸ்து சபையின் பத்துதெரிவுசெய்யப்பட்ட அங்கத்துவநாடுகளும், மேற்கு ஆசியப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணும் நோக்கத்துடன், இன்று சந்தித்துப் பேசவிருக்கின்றன.

மேற்கு ஆசியப்பிரச்னைக்கு ஒரு சமரசத் திட்டத்தைத் தயாரிக்கும்படி சபை நியமித்த கமிட்டி, அவ்விதிட்டமொன்றைச்சமர்ப்பிப்பதில் தோல்வியடைந்து விட்டதாகத் தெரிகிறது.

# சட்டவிரோதமாகக் குடியேறியோர் தொகை என்ன?

## பிரதமரிடம் பண்டிதர் கேட்கிறார்

கொழும்பு, வெள்ளி

'சட்டவிரோதக் குடியேற்றக்காரர் என சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, விடுபடுபவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?' என்று அடுத்த மாதம் 4-ம் திகதி பார்லிமெண்டில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம மந்திரியிடம் கேட்பார்.

பண்டிதர்இரத்தினம் சட்டவிரோதகுடியேற்றக்காரர் சம்பந்தமாகப் பிரதமரிடம் கேட்பதற்குமுன்னறிவித்தல் கொடுத்துள்ள சில கேள்விகள் விபரம் வருமாறு:-

O கிளிநொச்சி தொகுதியில் 1-1-67 லிருந்து 10-10-67 வரை சட்டவிரோதக் குடியேற்றக்காரர் எனப் பொலிசாரால் விசாரிக்கப்பட்டவர்கள், விசாரணையின் பின் விடப்பட்டவர்கள், தடுப்புமுகாம்களுக்கு அனுப்பப்பட்டவர்கள் தனித்தனியே எத்தனை பேர்?

O இவ்வாறு விசாரிக்கப்பட்டவர்களில், அரிசிப்பங்கீட்டுப்புத்தகம் வைத்திருப்பவர்கள், முன்னர்தடுப்புமுகாமில் அடைக்கப்பட்டு விடப்பட்டவர்கள், முன்னரும் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்திவிடப்பட்டவர்கள் என்போரின் பெயரையும் முகவரியையும் கூறுவாரா? அன்றேல் ஏன்?

O கிளிநொச்சித் தொகுதியில் வாழும் நாடற்றவர்களின் தொகை 1-1-66 லும் 1-1-67லிலும் எவ்வளவு?

O விசாரணையின் பின் தடுப்பு முகாமிலிருந்து விடுபடுபவர்களுக்கும் பொலிசாரால் விசாரணை செய்துவிடுபடுபவர்களுக்கும் அவர்கள் விசாரணை செய்யப்பட்டு விட்டமைக்குச் சான்றாக அவர்களுக்கு விசாரணை செய்த உத்தியோகத்தர்கள் ஒரு சான்றிதழ் வழங்குவதற்குஆவனசெய்வாரா?

---

### சூரன் போர்

திருக்கேதீச்சரம். வெள்ளி

திருக்கேதீச்சரநாதர் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் ஸ்கந்த சஷ்டிவிழா நேற்று ஆரம்பமாகியது. 7-ந் திகதி செவ்வாய்க்கிழமையன்று சூரன் போர்விழாவுடன் முடிவடையும். மறுநாள் திருக்கல்யாண விழாவும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சத்தியம் என்கின்ற வலுவான அத்திபாரத்தின் மேல்தான் உலகம் நிற்கிறது. அசத்தியம் என்பது இல்லாதது. ஆகையால் அதன் வெற்றிக்கு இடமேயில்லை சத்தியம் நிலைநிற்பது. ஆகையால் அதை அழிக்கவே முடியாது.

—காந்தி மகான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵
ஐப்பசி௴ 8௳ (4-11-67)

## விடிவுகாலம்

ஆளும்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில் கோஷ்டிப் பிரிவினை ஏற்பட்டுவிட்டதாகவும் பிளவுபட்ட ஒரு கட்சியினால் நாட்டை நல்ல முறையில் ஆட்சிசெய்ய முடியாதென்றும் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிக்கொள்வதாக அதனுடன் பலவருடங்கள் இணைந்திருந்து உழைத்த திரு. சிரில் மத்தியூ தெரிவித்திருக்கிறார். ஓர் அரசியல் கட்சியில் ஒருவர் சேர்ந்துகொள்வதும், விலகுவதும் பெரிய விஷயமல்ல. கட்சிகளில் சேர்வதும் விலகுவதும் இங்கு மட்டுமல்ல இதர பல நாடுகளிலும் கூட சர்வசாதாரணவிஷயமாகிவிட்டது. திரு. சிரில் மத்தியூ தமது முடிவை மாற்றிக்கொண்டு தமது ராஜினாமாவை திரும்பப்பெற்றுக் கொள்ளவும்கூடும்.

திரு. மத்தியூவின் ராஜினாமாச் சம்பவம் ஐக்கிய தேசியக் கட்சி தனது உண்மைநிலையை உணர்ந்து நாட்டுக்குச் செய்ய வேண்டிய தனது பொறுப்பையும் கடமையையும் சரிவரச் செய்யக்கூடிய முறையில் தன்னைத் திருத்திக்கொள்ள உதவவேண்டும். ஓர் அரசியல் கட்சிக்குள் மட்டுமல்ல எந்த ஸ்தாபனத்திலும் கருத்து வேற்றுமைகள் நிலவத்தான் செய்யும். ஆனால் அந்த ஸ்தாபனம் தனது பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றுவதற்கு கருத்துவேறுபாடுகள் இடையூறாக இருக்கக் கூடாது. ஆளும் கட்சிகளுக்குள் அபிப்பிராய பேதம் தோன்றி ஆட்சிபீடத்திலிருந்தே அது கவிழ்ந்துமிருக்கிறது. முன்னைய அரசாங்கத்துக்கும் இதேகதிதான் நேர்ந்தது.

கட்சிகளின் நலன்களையும் தனிப்பட்டோர் நலன்களையும்விட நாட்டின் நலனும் நாட்டு மக்களின் நலனுமே பெரிதாகக் கருதப்படவேண்டும். துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் கட்சிகளின் நலன்தான் பெரிதாகக் கருதப்படுகிறது. எந்த விஷயத்திலும் கட்சிகள் பற்றியே நம்நாட்டுத் தலைவர்கள் சிந்திக்கிறார்களேயன்றி நாட்டைப் பற்றியும் நாட்டு மக்களைப்பற்றியும் சிந்திப்போர் மிக மிக அரிதாகவே உள்ளனர். கட்சிகளும் அவற்றைச் சார்ந்தோரும் அடுத்த தேர்தலைப்பற்றியே அக்கறை கொண்டுள்ள வெறும் அரசியல் வாதிகளாகவே இருக்கின்றனரேயன்றி, அடுத்த சந்ததியினரைப்பற்றி அக்கறைகொள்ளும் அரசியல் ஞானிகளாகக்காணப்படவில்லை.

எல்லோரும் சோஷலிஸம் பற்றியே பேசுகின்றனர். நாட்டின்நலன்பற்றியும்பேசுகின்றனர். ஆனால் நாட்டின்நலன்கருதி எந்தவொரு நல்ல காரியத்திலும் எவரும் ஒன்றுபட்டு நிற்பதாகஇல்லை.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் மத்தியில் மட்டும்தான் இந்த நிலை என்று சொல்லமுடியாது தமிழர் என்றோர் இனத்தவர் இந்நாட்டில் வாழ்ந்தனரா என்று அடுத்தடுத்த பரம்பரையினர் கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ள போதிலும்கூட தமிழ்ச் சமுதாயத்திலும்இன்னும் ஒற்றுமை ஏற்படவில்லை.

இந்தநாடு சுதந்திரமடைந்து இருபதாண்டுகளாகிவிட்டன. இன்னும் நாம் குறிப்பிடக்கூடிய எந்தவித முன்னேற்றமும் அடையவில்லை. உணவுக்கும் உடைக்கும் வெளிநாடுகளையே எதிர்பார்த்திருக்கிறோம்.

தனிமனிதனின் நலனை விட குடும்பத்தின் நலன் பெரிது, குடும்பத்தின் நலனைவிட சமூகத்தின் நலன் பெரிது, சமூகத்தின் நலனைவிட நாட்டின்நலன் பெரிது, நாட்டின் நலனை விட உலகத்தின் நலன் பெரிது. இதை நமது தலைவர்கள் கருத்தில் கொண்டால் நம்நாட்டுக்குவிடிவுகாலம் விரைவில் வரும்.

# உணவு நெருக்கடியை
# பணக்காரரா வழிகாட்ட

ஒருசமயத்தில் ஒரு தான்யத்தை மட்டும் உபயோகியுங்கள். சாதாரணமாக வீடுகளில் சப்பாத்தி, அரிசி, பருப்பு வகைகள். நெய், வெல்லம், எண்ணெய் ஆகியவை உபயோகப்படுத்தப்படுகின்றன. இது தவிர காய்கறிகளையும், பழங்களையும் உபயோகப்படுத்துகிறார்கள். இவைகள் சரியான சேர்க்கையல்லவென்று நான் கருதுகிறேன். பால், வெண்ணெய், முட்டை, மாமிசம் ஆகியவைகளின் மூலம் (மிருக புரதச்சத்து அடைபவர்கள் பருப்புக்களை உபயோகிக்க வேண்டியதில்லை. ஏழை மக்களுக்கு காய்கறிகளின் மூலமே புரதச்சத்துக் கிடைக்கின்றது. பருப்பு. எண்ணெய் ஆகிய இரண்டையும் உபயோகிப்பதைப் பணக்காரர்கள் விட்டு விடுவார்களானால் இந்த இரண்டு அத்தியாவசியப் பொருட்களும் ஏழைமக்களுக்குக் கிடைக்குமாறுசெய்தவராவார்கள். ஏனென்றால் ஏழைகளுக்குக் காய்கறிப் புரதச்சத்தோ அல்லது மிருகப்புரதச் சத்தோ கிடைப்பதில்லை. வெங்காயம், முள்ளங்கி, காரெட், கொத்தமல்லி, தக்காளி ஆகியவைகளைப் பச்சையாக நறுக்கி வைத்துக்கொண்டு உணவுடன் சாப்பிடுவது நல்லது. அவ்வாறு நாம் பச்சையாகச்சாப்பிடும் ஒன்று அல்லது இரண்டு அவுன்சுக் காய்கறியானது சமையல் செய்யப்பட்டஎட்டு அவுன்சுக்காய்கறிக்குச் சமமாகும்.

### இனிப்புப் பதார்த்தங்கள்

இனிப்புப் பலகாரங்களைப் பூரணமாக அகற்றிவிட வேண்டும். அதற்குப் பதிலாக சிறுஅளவில் சர்க்கரை அல்லது வெல்லத்தைப் பாலில் போட்டோ அல்லது ரொட்டியுடன் வைத்துச் சாப்பிடலாம் அல்லது அவைகளைத் (அதாவது சர்க்கரை அல்லது வெல்லத்தை) தனியாகவும் சாப்பிடலாம்.

### பழங்கள்

புதுப்பழங்கள் சாப்பிடுவதற்கு நல்லனவே. ஆனால் உடலுக்கு ஒருசிறிது பழம் சாப்பிட்டால் போதும்; அது ஒரு விலையுயர்ந்த பொருள். பணக்காரர்களை விட ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும்தான் பழங்கள் மிகவும் தேவை. ஆனால் பணக்காரர்கள் அதிகப்படியாகப் பழங்களைச் சாப்பிடுவதால் ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் அது கிடைப்பதில்லை.

### தீங்கு செய்யா

நான் இதுவரை கூறியுள்ள யோசனைகள் உடலுக்குஎந்த விதமான தீங்கும் செய்ய மாட்டாஎன்பதற்கு உணவுச் சாஸ்திரத்தைப்பார்த்துள்ள எந்த மருத்துவரும் சான்று கூறுவர். அதற்கு மாறாக அவை உடல்நலத்தை அபிவிருத்திசெய்யும்.

### ஒரேஒரு வழிதான்

உணவுப் பொருள்களை மீதப்படுத்துவதற்கு இது ஒரேஒரு வழிதான். இது வெளிப்படையானதும்கூட. ஆனால் இதைச் செய்வதால் மட்டும் கண்களுக்குப் புலனாகும் அளவு — கணிசமான அளவு — பலன் கிடைத்து விடாது.

உணவுப் பற்றுக்குறை நெருக்கடி காலத்தில் யார்மீதப் படுத்துகிறானோ அவன் அந்த அளவு லாபம்பெற்றவனாகிறான். அதாவது எந்த அளவு உணவுப் பொருள்கள் மீதப்படுத்துகிறானோ அந்தந்தஅளவு அதிகமாக உற்பத்தி செய்தவனாகிறான். ஆகவே ஏழைகளின் கஷ்டத்தை உணருபவர்கள், அவர்களுடன் ஒன்றுபடுபவர்கள் தங்களுடைய தேவைகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும். இதற்குள்ள பல வழிகளில் சிலவற்றை காந்தியடிகள் இங்கு கூறுகிறார்.

### பேராசை வேண்டாம்

உணவுத்தான்ய வணிகர்கள் தங்களுடைய பேராசையை விட்டுவிடவேண்டும். முடிந்தஅளவு லாபம் சம்பாதிக்கப்பார்க்கும் வழக்கத்தையும் விட்டுவிடவேண்டும். முடிந்த அளவுக்கு குறைச்சலாகச் சாப்பிடுவதுடன் திருப்தியடையவேண்டும். ஏழைகளின் நன்மைக்காக உணவுத்தான்யம்வைத்திருக்கிறார்கள் என்ற நற்பெயரை அவர்கள் சம்பாதிக்கவேண்டும். இல்லையேல் அவர்களுடைய கடைகளை கொள்ளையடிக்கப்படக்கூடிய அபாயம் இருக்கிறது. அவர்கள் தங்கள் அண்மையில் உள்ள மக்களுடன் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

### அதிக விளைச்சல்

தங்களிடம் உள்ளதைப் பத்திரமாக வைத்திருக்குமாறு கிராமவாசிகளுக்குப் போதிக்கவேண்டும். எங்கெங்கு தண்ணீர் கிடைக்கிறதோ அங்கெல்லாம் புது விளைச்சல் எடுக்குமாறும் தூண்டவேண்டும். இதுவரை சொல்லப்பட்டவேலைகளிலெல்லாம் மிக முக்கியமான வேலை இதுவே. இதற்குப் பரந்த அடிப்படையில் புத்திசாலித்தனமாகப் பிரச்சாரம் செய்வது அவசியம். வாழை, உருளைக்கிழங்கு, பீட்ரூட், சேனைக்கிழங்கு, கருணைக்கிழங்கு ஆகியவைகளும், பூசினிக்காயும் உணவுப் பயிர்களே. இவைகளை எளிதாக விளையவைக்கமுடியும் என்பது பொதுவாக மக்களுக்குத் தெரிவதில்லை.

### ஜனத்தொகை

"ஜனத்தொகை அதிகமாக இருக்கிறது. ஆகையால் கர்ப்பத்தடை அவசியம், என்று கூறப்படுவதாக இருந்தால் நான் அந்தச் சித்தாந்தத்தை ஆட்சேபிக்கிறேன். இது ஒருகாலந்திலும் மெய்ப்பிககப்படவில்லை. நிலமுறை சரியாக இருந்து விவசாயம் அபிவிருத்திசெய்யப்பட்டு, ஓர் உபதொழிலுக்கும் வகை செய்வதாக இருந்தால் தற்போதுள்ளதைப் போன்று இருமடங்கு மக்களை நாடு தாங்கும். அதற்கு அந்தச் சக்தி இருக்கிறதென்பது எனது கருத்து.

— காந்திநூல்கள்

## பொரளையில் 'தமிழ் சங்கம்'

கொழும்பு, வெள்ளி

'தமிழுக்கும் தமிழ் கலாச்சாரத்திற்கும் பேராபத்தேற்பட்டிருக்கும் இவ்வேளையில் இத்தமிழ்ச்சங்கம் மற்றைய சங்கங்கள்போல் பங்கப்படாது உற்சாகத்துடன் இயங்க வேண்டும்.'

பொரளையில் தமிழ்சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும்போது பாரிஸ்டர் எம்.சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

உத்தியோகத்தர் தெரிவு விபரம்: போஷகர்கள் தொழில் அமைச்சர் திரு. எம். எச். முகமது, பாரிஸ்டர் எம்.சிவானந்தன், திரு. சு. வாமதேவன். தலைவர்: திரு. பொ. கந்தசாமி, உப-தலைவர்: திரு. கா. இராசதுரை, செயலாளர்: திரு. வேல்மணி, உபசெயலாளர்: திரு. வ. சபாநாதன், பொருளாளர்: திரு. வே. சண்முகரத்தினம்.

# ஆசிரியருக்குக் கடிதங்கள்

### 'ஈழச்சாலை' பொருந்துமா?

தற்பொழுது தமிழ்மக்கள் மத்தியில் 'லக்சல' பெயர் பிரச்னை ஒரு புதிய பிரச்னையாக வந்திருக்கிறது. 'லக்சல' விற்கு பொருத்தமான பெயரைத் தெரிந்து தந்தால் அப்பெயரை சூட்டுவதற்கு தடையில்லையென உள்நாட்டமைச்சர் கூறியிருக்கிறார். கிளிநெச்சி எம். பி. 'ஈழச்சாலை' என்ற பெயரைச் சூட்டலாமென யோசனை தெரிவித்துள்ளார். ஆனால் 'ஈழச்சாலை' என்றபெயர் இலங்கையை விட வேறுஎங்காவது தமிழர்வசிக்கும் இடத்தில் இப்படி ஒரு ஸ்தாபனம் தோன்றினால் அதற்கு பொருத்தமாக இப்பெயர் இருக்குமா, ஆதலால் 'லக்சல' விற்கு ஒரு பொருந்தமான தமிழ் பெயரை சூட்டும் போது அது தமிழ் உலகம் முழுவதும் பொருத்தமாக அமையக் கூடியதாக சூட்டினால் நல்லது.

செ. ம. மனோகரன்

ஊர்காவற்றுறை

### 'யாழ்—சாலை' நல்லதில்லையா?

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு 'லக்சல' என்ற பெயரைதமிழிலும் சூட்டியதையிட்டு இங்குள்ள பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுகிறது. தமிழரசு,தமிழ் காங்கிரஸ் கட்சிகளும், இப்பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் 'லக்சல' என்றபெயருக்கு ஏற்ற தமிழ் சொல்லாக 'ஈழச்சாலை'யை சூட்டலாம் என சிலர் கருத்து தெரிவித்துள்ளனர். ஏற்கனவே கொழும்பில் நிறுவப்பட்ட இந்நிலையத்திற்கு தமிழிலும் 'லக்சல' என்ற பெயரே வழங்கப்பட்டுவருகிறது. இதற்கு தமிழ் அரசியல் கட்சிகளோ கொழும்பில்வாழும் தமிழ் மக்களோ எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. ஆதலால் கொழும்பில் 'லக்சல' என்ற பெயரே தமிழிலும் தொடர்ந்து இருக்கும். இப்பெயரைஅரசாங்கம் 'ஈழச்சாலை' என மாற்றாது என்பது தெரிந்தவிஷயம்.

தமிழ் பிரதேசமானயாழ்ப்பாணத்தில் இந்தஸ்தாபனத்திற்கு தமிழ்ப் பெயர் சூட்ட வேண்டியது அவசியம். யாழ்ப்பாணத்தில் இந்நிலையத்திற்கு 'யாழ்-சாலை' என்று சூட்டுவதே மிகவும் பொருத்தமானதாகும்.

எஸ். சுப்பையா

யாழ்ப்பாணம்

### காரைநகர் பஸ உப-டிப்போ

காரைநகரில் இ. போ. ச. உபடிப்போ திறக்கப்பட்டது. தனிப்பட்ட ஒரு சில உத்தியோகத்தருக்காக என்றும் அங்கு எவ்வித வசதியும் இல்லையென்றும் 'ஈழநாடு' பத்திரிகையில் ஒருவர் எழுதியிருந்தார். அவர் கூறியது முற்றும் தவறானதாகும்.

இ. போ. ச. பஸ்சேவையை கையேற்கு முன்னர் காரைநகர் - யாழ்ப்பாணத்திற்கிடையில் பஸ் சேவை நடாத்தி வந்த வலிகாமம் மேற்கு பஸ் கம்பெனியார் காரைநகரில் தமது டிப்போவை வைத்து திறம்பட நடத்தினார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்நாட்களில் சுமார் 25 பஸ்கள் காரைநகரில் இரவு நேரங்களில் தங்கின. இ. போ. ச. பஸ்சேவையை கையேற்ற பின்னரும் சுமார் 15 பஸ்கள் இரவு நேரங்களில் தங்கிவந்துள்ளது. இப்பொழுது உப-டிப்போ திறந்தபின்னர் 20 பஸ்கள் தங்குகிறது எனவே டிப்போ பரந்து திறந்த பின்னர்தான் மேற்கண்ட வசதிகள் இல்லையென்பது சிரிப்பிற்கிடமானது. உப-டிப்போவில் தேவையான தண்ணீர்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பஸ் நிலையத்திற்கு அண்மையில் இரு மலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கனகசபாபதிப்பிள்ளை மடம் உப-டிப்போவிற்கு அருகாமையில் உள்ளது. இம்மடத்தை தொழிலாளர் இரவு நேரத்தில் தங்குமிடமாக பயன்படுத்தி வந்துள்ளனர். எனவே உப-டிப்போவினால் தொழிலாளருக்கு வசதி குறைவு என்பது உண்மையல்ல.

கா. க. சிவலிங்கம்,

கிராம சபை காரைதீவு,
காரைநகர்.

### ஒரே பெயர் இருக்கட்டும்

இலங்கை முழுவதும் 'லக்சல' நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது. ஆதலால் 'லக்சல' என்ற பெயர் தமிழிலும் இருப்பதனால் தமிழினத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படப் போவதில்லை, தமிழர்கள் தென்னிலங்கை முழுவதும் வாழ்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யைகுறைக்க ...ட்ட வேண்டும்

...தச் சித்தாந்தத்தை ஆட்சேபிக்கிறேன். இது ஒருகாலந்திலும் மெய்ப்பிககப்படவில்லை. நிலமுறை சரியாக இருந்து விவசாயம் அபிவிருத்திசெய்யப்பட்டு, ஓர் உபதொழிலுக்கும் வகை செய்வதாக இருந்தால் தற்போதுள்ளதைப் போன்று இருமடங்கு மக்களை நாடு தாங்கும். அதற்கு அந்தச் சக்தி இருக்கிறதென்பது எனது கருத்து.

— காந்தி நூல்கள்

## பொரளையில் 'தமிழ் சங்கம்'

கொழும்பு, வெள்ளி

'தமிழுக்கும் தமிழ் கலாச்சாரத்திற்கும் பேராபத் தேற்பட்டிருக்கும் இவ்வேளையில் இத்தமிழ் சங்கம் மற்றைய சங்கங்கள்போல் பங்கப்படாது உற்சாகத்துடன் இயங்க வேண்டும்.'

பொரளையில் தமிழ்சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசும்போது பாரிஸ்டர் எம். சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினர்.

உத்தியோகத்தர் தெரிவு விபரம்: போஷகர்கள் தொழில் அமைச்சர் திரு. எம். எச். முகமது, பாரிஸ்டர் எம். சிவானந்தன், திரு. சு. வாமதேவன். தலைவர்: திரு. பொ. கந்தசாமி, உபதலைவர்: திரு. கா. இராசதுரை, செயலாளர்: திரு. வேல்மணி, உபசெயலாளர்: திரு. வ. சபாநாதன், பொருளாளர்: திரு. வே. சண்முகரத்தினம்.

## இன்றைய பலன்

[4-11-67]

சனிக்கிழமை

[ஐப்பசி மாதம் 18உ]

நட்சத்திரம் - அனுஷம் பி.ப. 4-34மேல் கேட்டை

திதி-துதியை பகல் 7-38 மேல் திருதியை

சுப நேரம்- 3-04-4-34

ராகுகாலம் 9-04-10-34

மேஷம்- பிரிவுத்துயர், பிரயாண நினைப்பு

ரிஷிபம்- இதயங்கள் சங்கமம், இடைவெளி குறுகும்.

மிதுனம்- பகைவர் தடுப்பர், பார்த்து நட.

கடகம்-இலக்கிய ரசனை இசையிலும் பிரியம்.

சிம்மம்-தொழில் நலன், தொடர்புகள் பெருகும்.

கன்னி- புது வழி பிறக்கும், புகழும் பரவும்.

துலாம்- மறதியால் அவதி, மனப்போர்.

விருச்சிகம்- நம்பிக் கெடுதல், ஏக்கம்தாக்கும்.

தனுசு- அறுசுவை உண்டி, ஆனந்த வாழ்வு.

மகரம்- இல்லறச் சோர்வு, இனப்பகை,

கும்பம்- மனையில் மகிழ்ச்சி, மக்கள் நலன்.

மீனம்-பாசவலை, பரோபகார மிகுதி.

—சோதிடக கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை

## ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) ஓகஸ்ட் பரீட்சை அடுத்த வாரம் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள், அடுத்த வாரம் வெளியிடப்படும்.

கடைசித் தடவையாகக் கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற இப்பரீட்சைக்கு 70,000க்குமதிகமாக பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

ஓகஸ்ட் பரீட்சை இனிமேல் நடாத்தப்படாது.

## புதிய சீன ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி

பாதுகாப்பு வெளி விவகார அமைச்சுக்குப் புதிய ஆட்சேபக் கடிதமொன்றை சீனத் தூதுரகம் அனுப்பியுள்ளது.

அண்மையில் கொழும்பு வந்த சரக்குக் கப்பலொன்றிலிருந்த சீன மாலுமிகளை கள்ளக்கடத்தல் பொருட்கள் வைத்திருக்கிறார்களோ என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கைச் சுங்க இலாகாவினர் உடைகளைக் களைந்து பரிசோதித்ததாகக் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தை ஆட்சேபித்தே சீனத் தூதரகம் புதிய கடிதத்தை வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளது.

சம்பவம் பற்றிய சுங்க இலாகாவின் அறிக்கையைப் பெற்றுக்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சு இப்போது சீனத் தூதரகத்தின் கடிதத்துக்குப் பதில் தயாரித்துக்கொண்டிருக்கிறது.

## மோதியவருக்கு அபராதம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

கொக்குவிலைச் சேர்ந்த காத்தி-அப்பையா என்பவர் புளியங்கூடல் வாசியான கணபதிப்பிள்ளை தில்லையம்பலம் என்பவரை சுருவில் வீதியில் வைத்து இ. போ. ச. பஸ்வண்டியில் மோதிக் காயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவழக்கில் ஊர்காவற்றுறை நீதிபதி திரு. ஜமீல், எதிரிக்கு ரூபா 35 அபராதம் விதித்தார்.

## இருள் அகலவில்லை

சிலாபம், வெள்ளி

சிலாபத்தை விட்டு இருள் இன்னமும் அகலவில்லை. சமீபத்தில் ஏற்பட்ட பெருமழையினாலும், கடும் புயலினாலும் மின்சார இணைப்புக்கள் அறுந்து பாதிக்கப்பட்டன. ஆறு மின் சார விநியோக நிலையங்கள் இந்த மழை, புயலினால் பாதிக்கப் பட்டனவாம். இவைகள் திருத்தப்படுவதற்கு 90 ஆயிரம் ரூபாய் ஆகுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

## 300 பஸ்கள் வரும்

கொழும்பு, வெள்ளி

அடுத்த ஆண்டில் இலங்கைப் போக்குவரத்துச்சபை மேலும் 300 பஸ்கள் இறக்குமதி செய்யும். 3,700 இ. போ. ச. பஸ்களில் 400 பஸ்கள் பழுதடைந்து நிற்கின்றனவென்றும், மிகுதி பஸ்களில் 350 தினமும் சராசரியாக பழுதடைகின்றனவென்றும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ...ங்கள்

திறந்த பின்னர்தான் மேற்கண்ட வசதிகள் இல்லையென்பது சிரிப்பிற்கிடமானது. உப-டிப்போவில் தேவையான தண்ணீர்பெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பஸ் நிலையத்திற்கு அண்மையில் இரு மலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கனகசபாபதிப்பிள்ளை மடம் உப-டிப்போவிற்கு அருகாமையில் உள்ளது. இம்மடத்தை தொழிலாளர் இரவு நேரத்தில் தங்குமிடமாக பயன்படுத்தி வந்துள்ளனர். எனவே உப-டிப்போவினால் தொழிலாளருக்கு வசதி குறைவு என்பது உண்மையல்ல.

கா. க. ?சுவலிங்கம்,

கிராம சபை காரைதீவு,
காரைநகர்.

## ஒரே பெயர் இருக்கட்டும்

இலங்கை முழுவதும் 'லக்சல' நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுவருகிறது. ஆதலால் 'லக்சல' என்ற பெயர் தமிழிலும் இருப்பதனால் தமிழினத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படப் போவதில்லை, தமிழர்கள் தென்னிலங்கை முழுவதும் பரந்து வாழ்கிறார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பார்க்க மற்ற 7 மாகாணங்களிலும் தமிழர்கள் கூடுதலாகவாழ்கிறார்கள். தென்னிலங்கையில் தமிலும் 'லக்சல' என்ற பெயரே சூட்டப்பட்டுள்ளது. இதற்கு இதுவரையாரும் எதிர்ப்பு தெரிக்கவில்லை ஆதலால் யாழ்ப்பாணத்தில் மட்டும் புதியபெயர் எதற்கு?

'லக்சல' என்பது ஒருஸ்தாபனத்தை குறிக்கும் சொல்லாகும். கார்கில்ஸ், மில்லார்ஸ், லெயிடன்ஸ் ஸ்தாபனங்கள் போன்ற ஒரு ஸ்தாபனம் தான் 'லக்சல'வும். ஆதலால் லக்சலவிற்கு தமிழ்ப் பெயர் அவசியமில்லையென்பதே என் கருத்தாகும். குறுகியமனபான்மையைவிட்டு, தேசிய ஐக்கியத்தை வளர்க்க 'லக்சல' என்ற பெயரை ஏற்றுக்கொள்வதே சிறந்ததாகும்.

எஸ். கந்தசாமி,
கொழும்பு-13

# இதில் போவது உண்மையில சங்கடம் தான்

**மழைக் காலம் வந்தது, வந்தது!**
**பஸ் வண்டிகள் மக்கர் செய்தன!**
**பிரயாணிகள் நனைந்தனர், நனைந்தனர்!**
**இ. போ. ச. வாழ்க, வாழ்கவே!!**

பேப்பர் விற்கும் பொடியன் இப்படி ஒரு கவிதையைப் பாடிக் கொண்டு யாழ்ப்பாணம் பஸ் ஸ்டாண்டை சுற்றி வந்து உக்கி நனைந்த பேப்பர்களை விற்கத் தெண்டித்தான். நான் அவனைப் பார்த்து பரிதாபமாக சிரித்தேன். அவன் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தான்.

'என் ஏன் காயுது. எண்ணைக்கா; எலிப்பிழுக்கை ஏன் காயுது?' என்று கேட்டது அவனுடைய ஏளனச் சிரிப்பு.

அவன் சிரித்துக் கொண்டே போய் விட்டான்.

மழை கொட்டிக் கொண்டிருந்தது. இவருடைய மொட்டந் தலையில் 'டொக் டொக்' என்று ஒழுக்கு சொட்டுப் போட்டது.

களுடைய பஸ் தான் என்று அவர்கள் நினைக்க எனது கோஷ்டியாருக்கும் எதிரி கோஷ்டியாருக்குமிடையில் பற்பல வாக்குவாதங்களும், மோதல்களும், சிக்கல்களும் ஏற்பட்டன. 'ஐயோ, என்ரை பிள்ளை எங்கே!' 'எங்கையெனை குடை!', 'உமலை எங்கை விட்டிட்டாய்?' 'என்ரை சால்வையை விடு!' 'ஆர் குத்திறது பின்னலை?' என்று அபயக் குரல்கள் நாலா பக்கத்திலிருந்தும் கிளம்பின.

இந்த நெருக்கடியான நிலைமையில் ஒரு வெகுவிசித்திரமான நிகழ்ச்சியும் நடந்ததைக் கண்டு இவர் மெய்ம் மறந்து மூர்ச்சை போடாதது திருவுளச் செயல் தான்.

என்பது போல அசடு வழிந்தது.

பெண் வர்க்கம் தான் இப்படி செய்கிறதே என்று பார்த்தால் கோட்டும் டையும் கட்டிய உத்தியோக ஆண் வர்க்கம் சிலது கியூ வரிசையில் நிற்பது என்னவோ தீண்டாதவர்களுடன் கூட நிற்பதென நினைத்தவர்கள் போல கியூவின் தலையிலும் வாலிலும் நின்று கொண்டு சந்தர்ப்பம்வாய்ந்தவுடனே 'டபார்' என்று பாய்ந்து பஸ்ஸுக்குள் ஏறிக் கொண்டு விடுகிறது.

பின்னால் ஏறி முன்னால் இறங்கும் பஸ் வண்டிகளிலும் கூட இந்த பதினென்றில் புகுந்தவர்களுக்கு முன்னால் ஏறும் சலுகை உண்டு.

மழை கொட்டும் நேரத்திலும் இவரைப் போல வேட்டி உடுத்தியவர்கள் தெரியாமல் முன்பக்கத்தால் ஏறி விட்டால், 'ஏய், இறங்கி பின்னாலே ஏறு' என்று கொண்டக்டர் சிறிச் சினந்தெழுவார்.

இந்த வேடிக்கைகளையெல்லாம் பார்த்துக் கொண்டு இ. போ. ச. நீலச் சட்டைப் படை செய்வதென்னவென்று தெரியாது வாளாவிருக்கும். பாவம். அது எல்லாம் ஒடுங்கி செயல் இழந்து விடும்.

அந்த பஸ்ஸில் கடைசியாக ஏறியது இவர் தான்.

பஸ்ஸுக்குள் ஏறியிருந்து இவர் லாப நட்டம் கணக்குப் பார்த்த போது-காலில் ஒரு செருப்பு இல்லை. குடைக்கம்பி இரண்டு முறிந்து விட்டது, சால்வை இன்னொருவர் தோளில் இருந்தது.

கடவுளே என்று அங்க நஷ்டம் எதுவுமில்லாமல் முழுசாக வீடு போய்ச்சேர்ந்து விட்டார்.

## நாட்டிலும் நகரிலும்

— 'வழிப்போக்கன்' —

ஒரு விதமாக இவர் போக வேண்டிய 'லொக்கடா' பஸ் வந்து சேர்ந்தது. இவர் கியூ வரிசையில தான் நின்று கொண்டிருந்தார்.

ஆனால், அந்தோ, இவர் நின்ற கியூ வரிசையில் இரண்டு வெவ்வேறு பாதைகளில் செல்லும் பஸ் வண்டிகளைக் காத்துக் கொண்டு நிற்பவர்கள் எல்லோரும் நின்றார்கள் என்பது இவருக்கு தெரியுமா?

ஒரு பஸ் வந்து நின்றதும் என்னுடைய பஸ் தான் என்று நான் நினைக்க அவர்

பஸ் வந்ததோ இல்லையோ, இரண்டாம் மூன்றாம் கியூ வரிசைகளில் ஒன்றுமறியாதவர்கள்போல சாந்தமே உருவெடுத்து நின்ற மாதர் பகுதி அப்படியே 'நைஸாக' ஒவ்வொரு இரும்பு கிறுதிக்கும் கீழே புகுந்து முன் வரிசையில் வந்து நின்று மறுபடியும் ஒன்றுமே தெரியாதவர்கள் போல நின்றது.

இந்தப் படையெடுப்பைக் கண்ட ஆண்குலம் மதி கலங்கி அழுவதா சிரிப்பதா

# 'வெளிநாட்டை எதிர்பார்ப்பது வெட்கக்கேடு'

--உதவி அத்மச்சர்

கொம்பனித்தெரு, வெள்ளி

''நாட்டில் நிலவி வந்த போட்டிபூசல்களையும், இனமத பாகுபாடுகளையும் நீக்கி தேசிய உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி எல்லா இனமக்களிடையேயும் ஒற்றுமையை நிலைநாட்டியது தேசிய அரசாங்கமே.''

மருதானை கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை மண்டபத்தில் கொழும்பு தொண்டர் வித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரிய தினவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. ஆர். பிரேமதாசா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மேல்மாகாண பிரதம வித்தியாதிகாரி திரு. வே. சங்கரலிங்கம் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் உதவி உள்ளூராட்சிமந்திரி மேலும் பேசுகையில், வெளிநாட்டை இன்னும் எதிர்பார்த்துக் கொண்டு அடிமைகளாக நாம் இருக்கக்கூடாதென்றும், அது நமக்கு வெட்கக் கேடு என்றும் நமக்குத் தேவையானதை நாமே உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென்றும் கூறினர். மற்றும் பலரும் பேசினர்.

## எதிரிகள் விடுதலை

குரும்பசிட்டி, வெள்ளி

வட்டுக்கோட்டை கிழக்கு வாசியான கணபதி செல்லன் [வயது 40] என்பவருக்கு பொல்லால் அடித்துக் காயம் விளைவித்ததாக சின்னப்பொடி இரத்தினம், சின்னப்பொடி இலட்சுமி ஆகிய இருவர் மீதும் சங்கானைப் பொலிஸார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

காயமடைந்தவரான கணபதி செல்லன் தமது சாட்சியத்தின் போது பொய்ச் சாட்சியம் கூறியதைநீதிபதி எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்தார். வழக்காளி தரப்பு வழக்கறிஞர் வழக்கைத் தொடர்ந்து நடாத்த விருப்பம் தெரிவிக்காததையடுத்து நீதிபதி எதிரிகள் இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினர். எதிரிகள் சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார்.

## உணவு உற்பத்தி மகாநாடு

குரும்பசிட்டி, வெள்ளி

வலிகாமம் வடக்குப்பிரிவிலுள்ள கிராமங்களில் உப-உணவு உற்பத்திச் செய்கையை தீவிரப்படுத்திவிரிவு அடையச் செய்வதற்கான நடவடிக்கைகளைப் பற்றி ஆராய் தெல்லிப்பழையில் உள்ள காரியாதிகாரி அலுவலகத்தில் அண்மையில் விசேஷமகாநாடு நடாத்தப்பட்டது. கிராமசேவையாளர், விவசாயக் கழகம், கிராம முன்னேற்றச் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம் மகாநாட்டில்யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எம். ஜே. சபாரத்தினம், வலி. வடக்குக் காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

## இன்று மெத்தானந்தா ஈமைக் கிரியைகள்

கொழும்பு, சனி

காலமான பௌத்த ஜாதிக பாலவேகய சங்கத் தலைவர் திரு. எல். ஏச். மெத்தானந்தாவின் ஈமைக் கிரியைகள் இன்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜி. ஸி. ஈ.

# தமிழ் மொழி

('அ' பாடத் திட்டம்)

## வினுக்கள்

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத்தெரிக.

(i) அண்மையில் உமது பாடசாலையில் நிகழ்ந்த ஒரு கொண்டாட்டத்தைப்பற்றிப் பத்திரிகைக்கு ஓர் அறிக்கை எழுதுக.

(ii) 'மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும்' என்பதற்குச் சாதகபாதகமான கருத்துக்களை விளக்கிஎழுதுக.

(iii) தேசியக்கல்வி என்பதுபற்றி ஒரு கட்டுரை எழுதுக.

(iv) 'என் வாழ்வில் நடந்த மறக்கவொண்ணுச் சம்பவம்' என்பதுபற்றி வர்ணித்தெழுதுக.

(v) 'தமிழ் நாடகங்கள் வளர்வதற்கான வழிகள்' என்பதுபற்றி எழுதுக.

(vi) 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்ற பழமொழியை விளக்கும் கதையொன்று எழுதுக.

2. மேல்வரும் உரைப்பகுதியை மூன்றிலொன்றுகச் சுருக்கி எழுதுக.

சோழமன்னரின் அரசாட்சிமுறைகள் மிகவும் பாராட்டத்தக்கன. அரசாங்க அமைப்பு நாட்டின் வளத்தையும் கைத்தொழில்களின் வளர்ச்சியையும் சனங்களின் சுகத்தையும் பெருக்கும்படி அமைக்கப்பட்டிருந்தது. நிலஅளவின் கணக்கும், வரிகளின் விபரமும் அரசனும் அவனுடைய அதிகாரிகளுமாக ஆணை நடத்திவந்த வகையும் சாசனங்களில் தெளிவாகக் காணப்படுகின்றன. ஊர் ஊராய்க் கிராம காரியங்களைப் பார்த்துவரச் சபைகள் ஏற்பட்டிருந்தன. இச்சபைகள் அரசனுக்குக் கிராமத்திலிருந்து சேரவேண்டிய வருஷ வருவாயைத் தாமேவசூல் செய்து செலுத்தி வந்தன. ஊரின் மற்றக் காரியங்களை நேராகவோ அல்லது வாரியங்கள் என்று சொல்லப்பட்ட உட்கழகங்கள் மூலமாகவோ கவனித்துவந்தன. படிப்பு, வைத்தியம், வயல்களுக்கு நீரைப் பகுத்துக்கொடுத்தல், நடைபாதைகளையும் சாலைகளையும் சரிவரப் பாதுகாத்தல், ஏரிகள் தூர்ந்துபோகாமல குழியெடுத்தல் முதலிய காரியங்களெல்லாம் கிராமச்சபைகளைச் சார்ந்தன. அரசனுல் ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகள் அங்கங்கே எல்லாக் காரியங்களும் சரிவர நடக்கின்றனவா என்று பார்ப்பதிலும் குற்றங்குறைகள் ஏற்பட்டால் அவைகளை விசாரிப்பதிலும், உயர்தர நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்ட விவகாரங்களைத் தீர்ப்பதிலும், இவை போன்று இராச்சியம் முழுவதுக்கும் பொதுவாயுள்ள காரியங்களைக் கவனித்து நடத்துவதிலும் அமர்ந்திருந்தார்கள். பொதுவாகப் பார்க்கும்போது அரசாட்சியின் திறமையிலும், குடிகளின் சுதந்திரம், இராசபக்தி, தேசாபிமானம் முதலிய நலன்களிலும் நாட்டின் செழிப்பிலும் சோழர்கள் ஆண்ட காலத்துக்கு ஒப்பானகாலம் வேறு யாதொன்றுமே இல்லையெனலாம். இராசராசன் காலத்தில் சைவத்திருமுறைகள் வகுக்கப்பட்டன. அதற்கு அடுத்த நூற்றுண்டில் சேக்கிழார் பெரியபுராணமும், கம்பர் இராமாவதாரமும் பாடப்பட்டன. ஆதலால் தமிழ் இலக்கியம் ஓங்கி வளர்ந்ததும் சோழருடைய ஆட்சிக்காலத்திலேதான்.

3. கீழ்வரும் பாடல்களைப் படித்தபின்னர் வினுக்களுக்கு விடை எழுதுக.

[சூதினுல் பாண்டவர்களை வெல்ல வேண்டுமென்று சகுனி கூறியபின் நிகழ்வன]

அ. வில்லினு லுயர்ந்த வென்றி விதுரனை நோக்கிக் கொற்ற
மல்லினு லுயர்ந்த பொற்றேள் வலம்புரி மாலை வேந்தன்
வல்லினு லுபாயம் செய்ய மாதுலன் னுரைத்த தெல்லாம்
சொல்லினு னவனும் கேட்டுச் சொல்லெதிர்சொல்ல லுற்ருன்.

வலம்புரிமாலை வேந்தன்—துரியோதனன். வல் – சூது.

ஆ. வையமும் அரசும் வாழ்வும் வாங்குகை கருத்தே யாகில்
பொய்யடர் சூது கொண்டு புன்மையிற் கவர வேண்டா
மையநின் றந்தை யோலை யைவருக்கெழுதிவிட்டால்
மெய்யுற மறுத்துச் சொல்லார் வேண்டின தருவ ரன்றே.

இ. தந்தைதன் னேவ லாலே தருமனுந் தம்பி மாரு
மிந்தமண் ணுடை கைவிட் டெரியெழு கானஞ் சேர்வர்
முந்துற நுமதே யாகு முழுதும்வாழ் வெழுதுஞ் செம்பூம்
பைந்தொடை யரசர் கேட்டாற் பாவமும் பழியு மாகா.

ஈ. என்றவ னுரைப்பக் கேட்டே யெரியெழுமனத்த னுகி
யொன்றிய கேண்மைத் தந்தைக் கொருபுடை வார முண்டோ
வன்றிறன் மைந்தர் வாழ்வு வாங்கியின் றெமக்குத் தந்தாற்
புன்மொழில் வசையே யன்றிப் புகழ்சொலோ புகல்வ தம்மா.

வாரம்—அன்பு

(i) இப்பாடல்களில் துரியோதனனைக் குறிப்பிட வந்த பகுதியை எழுதுக.

(ii) சொல்லெதிர் சொல்லியவன் யாவன்; சொல்லியவை யாவை.

(iii) இப்பகுதியில் வந்துள்ள இடைச்சொல், பண்புத்தொகை, பெயரெச்சம் ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணந்தருக.

(iv) மாதுலன், வென்றி, கேண்மை, கானம் இவை யொவ்வொன்றினதும் பொருள் கொண்ட வேறு ஒவ்வொரு சொல் எழுதுக.

(v) பிரித்தெழுதுக — பைந்தொடை, வன்றிறன்மைந்தர், தந்தைக் கொருபுடை, எரியெழுமனத்தன்.

4. பின்வருவனவற்றின் குறிப்புப் பொருள் வெளிப்பட அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக:-

கன்னமிடுதல், அம்பலப்படுத்துதல், சாணேற முழம் சறுக்குதல், தாரைவார்த்தல், நட்டாற்றில் கைவிடுதல்.

5. பின்வருவனவற்றின் பொருள் விளங்க அவற்றை வாக்கியங்களிலமைத்தெழுதுக:

வாய்மை, சதுக்கம். இடுக்கண், நிர்மூலம், தண்ணளி, பாழ்நிலம், சின்னுள், அரும்பாடு.

(விடைகள் 7-ம் பக்கம்)

## "மட்டக்களப்பு உலக தமிழரின் பிறப்பிடம்"

மட்டக்களப்பு, வெள்ளி

"மட்டக்களப்புத் தமிழகம் உலகத் தமிழர்களின் பிறப்பிடமாக அமைந்திருக்கிறதென்று கூறுமளவுக்கு இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையும் நம் பாமர மக்கள் சாதாரணமாகக் கையாளும் வார்த்தைப் பிரயோகங்களும் சங்க காலத்தை நினைவுபடுத்தும் பாங்கில்பொருந்தியுள்ளன."

தீபாவளித் தினத்தன்று மட்டக்களப்பு - பட்டிருப்பு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற மட்டக்களப்பு தமிழ்ச்சங்க ஆரம்பகூட்டத்தில் பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். ராசமாணிக்கம் மேற்கண்டவாறு கூறினுர்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தலைமை வகித்தார்.

"சங்க காலந்தொட்டு முதல், இடை, கடை என்றவாறு சங்கங்கள் வைத்து தமிழ் ஆராய்ச்சி நடாத்தியவர்கள் நம் மூதாதையர்கள் என்பதை மனதில் கொள்ளவேண்டும்" என்று புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை தமது தலைமையுரையில் சொன்னுர். மற்றும் பலரும் பேசினர்.

## மனையியல் ஆசிரியை இல்லை

சுழிபுரம், வெள்ளி

இப்பகுதியிலுள்ள அனேக பாடசாலைகள், கல்லூரிகளில் மனையியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியைகள் இல்லையாம். முன்பு இங்கு சில கல்லூரிகளில் கடமையாற்றியவர்கள் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து காலி இடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லையாம். இதனுல் மாணவிகள் பெரிதும்கஷ்டப்படுகின்றனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி 4-11-67

செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 கந்தரனுபூதி, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 குரல்வகை, 6-45 [illegible] 7-15 பா வளம், 7-30 குங்குமம், 8-00 [illegible], 9-30 விவாதமேடை, 10-00 நேயர்விருப்பம்.

## சஷ்டியப்த பூர்த்திவிழா

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவின் பிரபலகுருக்களான சிவஸ்ரீ ஏ. இராமசாமிக்குருக்களின் சஸ்டியப்தபூர்த்திவிழா நெடுந்தீவில்அவரது சிரேஷ்ட புத்திரன் பிரமஸ்ரீ சிவராமலிங்க ஐயரினில்லத்தில் நடைபெற்றது. வியாகரணசிரோமணி சீதாராமசாஸ்திரி, நியாய சிரோமணி சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் விழாவை நடாத்திவைத்தனர். நெடுந்தீவிலுள்ள பல நூற்றுக்கணக்கான இந்துக்களும், அனலைதீவைச்சேர்ந்த சைவ சமயப் பிரமுகர்கள் சிலரும் விழாவில் கலந்துகொண்டனர். வித்துவான் திரு. சின்னராசாவின் மேளக்கச்சேரியும் இடம்பெற்றது.

## செல்வச்சந்நிதி அப்பீல்

கொழும்பு, வெள்ளி

செல்வச்சந்நிதி ஆலயப் பிரவேச வழக்கின் அப்பீல் இம்மாதம் 6-ம் திகதி திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குள் சென்று வழிபட விடாது வண்ணைத் தடுத்ததாக இகுணம் என்பவர் தொடர்ந்த இவ்வழக்கில், பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு அபராதம விதித்தார். எதிரிகள் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருந்தனர்.

## லஞ்சம்கொடுக்க முயன்றாராம்

சங்கானை, வெள்ளி

கைலஞ்சம் கொடுத்து காரியத்தை முடிக்கப் பார்த்த காற்சட்டைக்காரர் ஒருவர் பொலிஸ் இன்ஸ்பெக்டரால் எச்சரிக்கைசெய்து அனுப்பப்பட்டார். இச்சம்பவம் சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கட்டுப்பாட்டுவிலையைமீறி மல்லி விற்பனவு செய்த ஒருவர்மீதான வழக்கை ரத்துச் செய்வதற்கே குறிப்பிட்ட நபர் சங்கானை பொலிஸ் நிலையத்துக்கு வந்து, சங்கானைப்பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. டயஸிடம் 'இரகசிய'மாக ஓர் என்வலப்பை கொடுத்தாராம். இன்ஸ்பெக்டர் அதனை உடைத்துப் பார்த்தபோது 200 ரூபாய் நோட்டுக்கள் இருந்தனவாம்.

இன்ஸ்பெக்டர் அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களை அழைத்து, விபரத்தைச் சொல்லிவிட்டு அந்த நபர் முன் காசை என்வலப்புடன் தூக்கி எறிந்தாராம்.

பின் அந்தநபர் மன்னிப்புக்கோரவே இன்ஸ்பெக்டர் கடுமையாக எச்சரித்து விட்டு அனுப்பி வைத்தாராம்.

## கந்தஷஷ்டி விழா

சுழிபுரம், வெள்ளி

சித்தங்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவிலில் கந்தசஷ்டி விழா வெகு விமரிசையாக நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. தினமும் விசேட பூசைகள், கூட்டுப்பிரார்த்தனை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இறுதி நாள் அன்று சூரன் போர் நடைபெறும.

## தீக்கிரை

சுழிபுரம், வெள்ளி

பனிப்புலம் சுப்பிரமணியம் இராசையா என்பவருக்குச் சொந்தமான வீட்டின் ஒரு பகுதி நள்ளிரவு தீக்கிரையானது. நூற்றுக்கணக்கான ரூபா பெறுமதியான பொருள்கள் பலத்த சேதம் அடைந்ததாகத் தெரிகிறது. சுவாமி தரிசனம் செய்வதற்காக தூண்டாமணிவிளக்கு கொழுத்திவைக்கப்பட்டதாகவும், அவ்விளக்கைஅணைக்க மறந்ததினுல் விளக்குப்பெரிதாக எரிந்து வீட்டுக் கூரையில் தீபிடித்துக்கொண்டதாகவும் தெரிகிறது.


ராதா மணிமார்க்

# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து. கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனுதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.

"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டம்

## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

பண்டத்தரிப்பு, வியா.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இளவாலை என்றியரசர் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகித பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி இரு பிரிவிலும் வெற்றி பெற்றது.

மேற்படி கல்லூரிகளின் 1-ம் பிரிவினர்க்கிடையே நடைபெற்ற விறுவிறுப்பான மோதலில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் 3 கோல்களைப் போட்டனர். என்றியரசர் கல்லூரி வீரர் 1 கோல் மட்டுமே போட்டனர்.

இரண்டாம் பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் திறமையாக விளையாடி 4 கோல்களைப் போட்டனர். என்றிஸ் வீரர் 1 கோல் போட்டனர். மேற்படி ஆட்டம் இளவாலைக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

## 'ருவின்ஸ்' வெற்றி

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 4—2 கோல்களால் வெற்றியீட்டினர். ருவின்ஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் விளையாடிய மாசிலாமணி, சந்திரபோஸ், ஜோர்ஜ், சந்திரபாலன் ஆகியோரின் விளையாட்டு பாராட்டக் கூடியதாகவிருந்தது. போட்டிக்கு திரு. நீலநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

## ஸ்கந்தா வெற்றி

குரும்பசிட்டி, வியா.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சினேகபூர்வமான இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கோஷ்டி வீரர்கள் 7—0 கோல்களால் வெற்றி பெற்றனர். இப் போட்டிக்கு திரு. சே. நாகமணி மத்தியஸ்தம் வகித்தார்.

இரு கல்லூரிகளினதும் 3-ம் பிரிவுக் கோஷ்டிகள் கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டியிலும 3—1 கோல்களால் அருணோதயாவை ஸ்கந்தா வீரர்கள் தோற்கடித்தனர் திரு. சி. தியாகராசா இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தராக கடமையாற்றினார்.

## 'கிருஸகொப்பேர்ஸ' வெற்றி

சங்கானை, வெள்ளி

சண்டிலிப்பாய் கிருஸ்கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும். மாரீசன் கூடல் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் மாரீசன் கூடல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் பிரிவு 1—0 கோல்களையும் முதலாம் பிரிவு 2—1 கோல்களையும் பெற்று 'கிருஸ் கொப்பேர்ஸ்' வெற்றியீட்டியது.

விளையாட்டுப் போட்டிகளுக்கு முறையே திரு. எஸ். இராசரத்தினம். திரு. வி. பத்மநாதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமை வகித்தனர்.

## இரு பிரிவிலும் வெற்றி

சங்கானை, வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான போட்டியில் இரண்டாம் பிரிவு 3—2 கோல்களாலும் முதலாம் பிரிவு 1—0 கோல்களாலும் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டிகளுக்கு முறையே திரு. புவநாதன், திரு. குமரைய்யா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

## வெற்றிதோல்வி இல்லை

குரும்பசிட்டி, வெள்ளி

வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களின் தெரிவுக் கோஷ்டிக்கும் வடமராசி தெரிவுக் கோஷ்டிக்குமிடையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா விளையாட்டு மைதானத்தில்நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி எவருக்கும் வெற்றி தோல்வி இல்லாது முடிவடைந்தது. இரு தரப்புக் கோஷ்டிகளும் தலா நான்கு கோல்களை போட்டுக் கொண்டனர். திரு. வி. ஜெயராசா இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

## யாழ்.பொலிஸ் தோல்வி

சுழிபுரம், வெள்ளி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி பட்டதாரி மாணவகோஷ்டிக்கும்யாழ்ப்பாணம பொலிஸ் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவ கோஷ்டியினர் ஐந்து கோல்களைப் போட்டு வெற்றி பெற்றனர். பொலிஸ் கோஷ்டியினர் கோல் எதுவும் போடவில்லை. போட்டி யாழ்ப்பாணக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மத்தியஸ்தராக திரு. துரைரத்தினம் கடமையாற்றினார்.

---

## கரபந்தாட்டம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

மாதகல் சென். தோமஸ் சனசமூக நிலையக் கோஷ்டிக்கும் காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்குமிடையே நடைபெற்ற கர பந்தாட்டப் போட்டியில் முதல் இரு ஆட்டங்களிலும் சென். தோமஸ் நிலையத்தினர் வெற்றி பெற்றனர். திரு. ச. பா. யோசெவ் மத்தியஸ்தம் வகித்தார்.

---

உதைபந்தாட்டம்

## 1-ம் பிரிவு ஹாட்லி வெற்றி 2-ம்பிரிவுசென் பற்றிக்ஸுக்கு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென் பற்ரிக்ஸ் கல்லூரிக்கும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 1-ம், 2-ம் பிரிவுகளுக் கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகளில் முதலாம் பிரிவில் நடந்த மோதலில் ஹாட்லிக் கல்லூரி 1-0 கோலால் சென். பற்றிக்ஸ் கல்லூரியை வென்றது, 2-ம் பிரிவு ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 4-0 கோல்களால் ஹாட்லிக்கல்லூரியை வென்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இவ்விரு போட்டிகளும் மிகவும் விறுவிறுப்பாகவும் சுறுசுறுப்பாகவுமே நடைபெற்றன. ஆட்டம் அருமையானதாகவும் ரசிப்பானதாகவும் காணப்பட்டது. இடைவேளைக்கு முன்னர் சென். பற்றிக்ஸ் முன்னனி வீரர்கள் இரு கோல்களை அடுத்தடுத்து நுழைத்தனர். ஹாட்லியும் கோல்போடுவதற்கு தீவிரமாக மோதிக் கொண்டிருந்தது. இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. மேலும் சென். பற்றிக்ஸ் இரு மேலதிக கோல்களை விளாசியது. எனினும் ஹாட்லிக் கோஷ்டியினர் இயன்றவரை பலமாகத்தான் மோதினர். பல கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது தோல்விக்குக் காரணமாக அமைந்து விட்டது.

### ஹாட்லி வெற்றி

இப்போட்டியை அடுத்து முதலாம் பிரிவுகளுக்கிடையேயான மோதல் நடைபெற்றது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் இருசாராரும் அருமையாகவிளையாடினர். முன்னணி வீரர்கள் அபாரமான ஒரு கோலை அற்புதமாக விளாசினர். இடைவேளைக்குப் பின்னர் நடைபெற்ற ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் ஒரு புது உற்சாகத்துடன் மோதியது. இரு கோஷ்டியினரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் பலமாக மோதியதால் இடைவேளைக்குப் பின்னர் இருவரும் கோல்கள் போடமுடியவில்லை. [வி.நி]

## கொக்குவிலில் இன்று வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு மாநகர அங்கத்தவரும் பிரபல வர்த்தகருமான திரு. ரி. நீதிராஜா செனட்டராகத் தெரிவு செய்யப்பட்டதை முன்னிட்டு கொக்குவிலில் இன்று அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது. இன்று மாலை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் நடைபெறும் இவ்வரவேற்பு வைபவத்துக்கு புலவர் த. குமாரசுவாமிப்பிள்ளை தலைமைவகிப்பார். கொக்குவில் கி.ச. தலைவர் திரு'ஸி. அருளம்பலம், திரு. மு. ஆலாலசுந்தரம், ஹன்டி எஸ். பேரின்பநாயகம் உட்படப்பலர் உரையாற்றுவர்.

### கைது

சங்கானை, வெள்ளி

கட்டுப்பாட்டு விலையை மீறி மல்லியை விற்ற பண்டத்தரிப்பைச்சேர்ந்த வர்த்தகர் ஒருவர் சங்கானைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். கால் ருத்தல் மல்லியை 55 சதத்துக்கு இவர் விற்றாராம். இவரது கடையிலிருந்து மிகுதி மல்லி மூடைகளையும் பொலிஸார் கைப்பற்றினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜி. ஸி. ஈ. தமிழ்மொழி விடைகள்

**விடைகள்:**

3\. [i] துரியோதனன், கொற்ற மல்லின லுயர்ந்த பொற்றேரேள் வலம்புரி மாலை வேந்தன்' என்று குறிப்பிடப்படுகிறான்.

[ii] சொல்லெதிர் சொல்லியவன் விதுரன் ஆவான். அவன் சொல்லியவை:- பூமியையும் இராச்சியத்தையும் செல்வத்தையும் பெற்றுக்கொள்வது உனது கருத்தாக இருந்தால் பொய்மை நிறைந்த சூதாட்டத்தினால் இழிந்த வழியில் கவர வேண்டாம். ஐயனே! நின் தந்தை பஞ்சவர்க்கு ஓலை எழுதி யனுப்பினால் உண்மையாக அவற்றை அவர்கள் மறுக்கமாட்டார்கள். விரும்பியன தருவார்கள்.

தந்தையின் கட்டளைப்படி தருமனுந் தம்பிமார்களும் இந்த உலகை ஆள்வதை விட்டு எரி நிறைந்த காட்டுக்குச் செல்வர். அவர்கள் செல்வம் முழுவதும் தாமதமின்றி உமக்காகிவிடும். மாலையணிந்த அரசர்கள் கேட்டறிந்தாலும் பாவமும் ஆகாது, வசையும் ஆகாது.

[iii] இப்பகுதியில் வர்துள்ள
இடைச் சொல் — அம்மா.
பண்புத் தொகை — பைந்தொடை.
பெயரெச்சம் — உயர்ந்த.

[iv] ஒத்த பொருள் கொண்ட சொற்கள்.
மாதுலன் — மாமன்.
வென்றி — வெற்றி.
கேண்மை — உறவு.
கானம் — காடு.

[v] பிரிப்பு
பைந்தொடை — பசுமை+தொடை.
வன்றிறல் மைந்தர் — வன்மை+திறல் +மைந்தர்.
தந்தைக்கொருபுடை — தந்தைக்கு+ஒரு +புடை.
எரியெழு மனத்தன் — எரி+எழு+மனத்தன்.

4\. கன்னமிடுதல்: உண்ண உணவும் படுக்க இடமுந் தந்த சாது மிரியலின் வீட்டில் வெள்ளி விளக்குகளைத் திருடும்போது அன்னமிட்ட வீட்டில் கன்னமிடலாமா என்று ஜாம்வல்ஜான் மனச்சாட்சி அவனை உறுத்தியது.

அம்பலப்படுத்துதல்: ஊருக்குப் பெரியவராக முயன்ற அவரது முன்னைய நடத்தைகளை அம்பலப்படுத்திப் புதினத்தாள் ஒன்று எழுதியது.

சாணேற முழம் சறுக்குதல்: சாணேற முழம் சறுக்கியது போல எமது நாடு பொருளாதாரத்தில் சிறிது முன்னேற, தேசிய உற்பத்திப் பொருள்களின் விலை பெரும் அளவு இறங்கி விட்டது.

தாரை வார்த்தல்: போர்க்களத்தில் கன்னனிடம் கொடைப் பயனைக் கேட்ட கண்ணன் அவன் அப்படியே தந்தேன் என்று கூறியபோது தாரை வார்த்துத் தருமாறு சொல்லினான்.

நட்டாற்றில் கைவிடுதல்: தமயந்தியை அழைத்துச் சென்ற நளன் அவளை நட்டாற்றில் கைவிட்டது போல நடுக் காட்டில் கைவிட்டுச் சென்றான்.

5\. வாய்மை: மனுவேந்தன் மரபில் வந்த மன்னனாகிய நீ தந்த வரத்தைக் கேட்காதே என்றல் வாய்மையாகுமோ என்றான் கைகேயி.

சதுக்கம்: சுதந்தர சதுக்கத்தில் நடைபெற்ற மாணவர் அணிவகுப்பைப் பார்வையிட்ட பிரதமர் மிக்க மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

இடுக்கண்: எவ்வித இடுக்கண் வந்த போதும் வாய்மை தவறமாட்டேன் என்ற உறுதியுடனிருந்தான் அரிச்சந்திரன்.

நிர்மூலம்: மனித இனத்தையே அடியோடு நிர்மூலம் செய்ய வல்ல அணுவாயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தண்ணளி: மக்களிடத்துத் தண்ணளியுள்ள மன்னவன் அரசு, வளர்மதியம் போல் நாளும் வளர்ந்து வரும் என்று புலவர் கூறினார்.

பாழ்நிலம்: பகைவர் நாட்டைப் பாழ்நிலமாக்கி எருக்கு முளைக்கச்செய்து வெற்றியுடன் திரும்பினான் படைத்தலைவன்.

சின்னாள்: என்றைக்காவது கூற்றுவன் வருவான். எனவே சின்னாள் வாழ்வினையுடைய நாம் இப்பொழுதே அறம் செய்யவேண்டும்.

அரும்பாடு: அரும்பாடுபட்டுத் தேடிய பணத்தைப் புதைத்துவிட்டு, திடீரென்று இறந்துவிட்டால் அந்தப் பணத்தை யார் அனுபவிக்க முடியும்?

இம்மை: இம்மையில் செய்தவை மறுபிறவிக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமின்றிக் கொடுத்த வள்ளல்கள் பலர் உளர்.

பிராயச்சித்தம்: கன்றினைக் கொன்ற பாவத்தைப் பிராயச்சித்தம் செய்து போக்கலாம் என்று கூறியவர்களைப் பார்த்து அதனால் பசுவின் துயர் தணியுமா என்றான் மனுச்சோழன்.

(அடுத்த மாதிரி வினா விடைகள் 10-11-67இல் வெளிவரும்.)

# ஆசிரியர் பலருக்கு திடீர் இடமாற்றம்

## வெளிமாகாணங்களிலிருந்து வரும் உத்தரவு

யாழ்ப்பாணம், வெள்ளி

வடக்கு மாகாணத்திலுள்ள பெரிய கல்லூரிகள் பாடசாலைகளிலிருந்து திடீர் திடீரென ஆசிரியர்கள் வெளி இடங்களுக்கு அனுப்பப்படுகின்றனர் என்று அறியப்படுகிறது.

கல்லூரிகளினதும்பாடசாலைகளினதும் அதிபர்களிடம் ஆலோசனை எதுவும் கேட்கப்படாமலே அங்குள்ள ஆசிரியர்கள் பலருக்கு இடமாற்ற உத்தரவு கிடைக்கிறதாம்.

வட பகுதியிலுள்ள பாடசாலைகள் வடபகுதி வித்தியாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோதிலும் சில பெரிய பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர் சிலருக்கு வேறு மாகாணங்களிலுள்ள வித்தியாதிபதிகளிடமிருந்து தங்கள் பகுதியைச் சேர்ந்த பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உத்தரவு கிடைக்கிறதாம்.

இந்த இடமாற்றஉத்தரவு ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர் மத்தியில் பெரும் பரபப்பையும் அதிருப்பதியையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த நடவடிக்கையைத் எதிர்த்துப் பெற்றோர்-ஆசிரியர் சங்கங்கள் குரல் எழுப்ப முயற்சி செய்துவருவதாகவும் அறியப்படுகிறது.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியா.

இன்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 166-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:-

**1-வது பரிசு**

04Q 0086 ரூபா 100,000

**2-வது பரிசு**

17 N 0020 ரூபா 40,000

**3-வது பரிசு**

51 Y 0089 ரூபா 10,000

தலா 1569 ரூபா 30 சதம் பெறும் 100 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு;-

| | |
|---|---|
| 13 R 0987 | 14 N 0331 |
| 03 R 0039 | 20 N 0399 |
| 03 H 0059 | 22 S 0208 |
| 59 M 0136 | 29 V 0665 |
| 21 P 0689 | 09 B 0071 |
| 28 M 0099 | 03 K 0917 |
| 05 B 0533 | 55 S 0572 |
| 08 Q 0233 | 57 P 0952 |
| 48 X 0227 | 17 Z 0298 |
| 10 F 0167 | 14 O 0620 |
| 37 N 0449 | 57 B 0823 |
| 36 F 0548 | 10 J 0119 |
| 17 E 0104 | 18 J 0076 |
| 22 G 0083 | 19 L 0066 |
| 20 C 0856 | 13 B 0983 |
| 62 G 0964 | 51 P 0960 |
| 05 H 0712 | 57 E 0134 |
| 46 R 0415 | 20 R 0675 |
| 43 D 0557 | 02 S 0243 |
| 11 M 0194 | 04 R 0357 |
| 27 V 0983 | 03 C 0484 |
| 54 Y 0510 | 32 F 0899 |
| 11 Y 0456 | 46 N 0870 |
| 10 Q 0480 | 29 N 0308 |
| 13 C 0050 | 08 W 0059 |
| 03 O 0050 | 30 Y 0744 |
| 03 M 0710 | 35 X 0219 |
| 30 K 0243 | 62 C 0659 |
| 36 B 0583 | 58 S 0687 |
| 52 V 0841 | 59 O 0185 |
| 07 S 0463 | 51 Z 0676 |
| 57 O 0447 | 29 V 0043 |
| 05 U 0703 | 61 N 0090 |
| 31 S 0767 | 22 M 0685 |

| | |
|---|---|
| 62 K 0047 | 39 G 0569 |
| 17 T 0304 | 46 Z 0160 |
| 08 B 0280 | 49 G 0023 |
| 17 X 0365 | 60 Y 0024 |
| 53 Z 0492 | 25 V 0029 |
| 53 D 0324 | 06 Z 0984 |
| 13 P 0007 | 19 F 0636 |
| 28 A 0350 | 10 L 0160 |
| 05 M 0882 | 28 U 0375 |
| 02 U 0308 | 54 G 0805 |
| 04 Z 0379 | 01 R 0169 |
| 13 L 0410 | 41 R 0964 |
| 53 E 0174 | 27 H 0017 |
| 14 R 0787 | 10 R 0251 |
| 06 J 0305 | 35 L 0079 |
| 57 W 0436 | 22 V 0902 |

[இவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்]

## ஓட்டம் பிடித்த இளைஞர்

உடுப்பிட்டி, வெள்ளி

இளம் பெண்ணைக் கடத்த முயன்றவர் அடி தாங்காது ஓட்டம் பிடித்த சம்பவம் கரவெட்டி மேற்கில் நிகழ்ந்துள்ளது. இளைஞரொருவர் ஓர் இளம் பெண்ணைக் காதலித்து வந்ததாகவும், அவ் இளம்பெண் அவ்விளைஞரின் காதலை ஏற்கமறுக்கவே ஆத்திரம் கொண்ட காதலன் காரொன்றைக் கொண்டு வந்துநிறுத்திவிட்டுவீதியால் சென்ற தனது காதலியைப் பலவந்தமாகக் கடத்திச் செல்ல முயன்றாராம். இதனால் கோபமடைந்த அவ் இளம்பெண் தன்னைக் கடத்திச் செல்ல முயன்ற வாலிபரின் கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறையவே, அடியின் வேதனை தாங்காது அவ் வாலிபர் ஓட்டம்பிடித்தாராம்.

பருத்தித்துறை பொலிஸார் சம்பந்தப்பட்ட இளைஞனைத் தேடிவருவதாகவும் அறியப்படுகிறது.


## இளைஞர்கள் தேவை

மிகவும் தரமான எங்கள் ரோறஸ் தேயிலையை வீடுகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு கல்வியறிவுள்ள இளைஞர்கள் தேவை. ஊக்கமும் வல்லமையும் உள்ளவர்கள் நல்ல வருமானத்தை எதிர்பார்க்கலாம். சிறிய தொகை பிணைப்பணமாக கட்ட வேண்டியிருக்கும். நேரில் வந்து சந்திக்கவும்.

**நந்தி இன்டஸ்ரீஸ் அன்ட் ஏஜென்ஸீஸ் லிமிட்டெட்,**

''ரோறஸ் ரீ ஹவுஸ்''

20, ஸ்ராலி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

## கரணவாயில் மீண்டும் திருடா

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய்ப்பகுதியில் மீண்டும் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

சென்றபுதன்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் கரணவாய் வடக்கு நவிண்டில் என்னுமிடத்தில் ஒரே சமயத்தில் மூன்று வீடுகளில் நடைபெற விருந்த திருட்டு முயற்சிகள் தக்க சமயத்தில் முறியடிக்கப்பட்டன. இப்பகுதியில் நகைகள் அடகு பிடிப்பவரான திருமதி சங்கரப்பிள்ளை என்பவரின் வீட்டினுள புகுந்த திருடனொருவன் வீட்டுக்காரர்கள் சப்தம் கேட்டு விழித்தெழுந்த போது ஓட முயற்சிக்கையில் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டதாகவும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் இத் திருடன் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

வேறு இரு வீடுகளிலும் திருடர்கள் திருட முயற்சிக்கையில் அரவம் கேட்டெழுந்தபெண்கள் திருடன் திருடன் எனக்கூக்குரலிட்டு அலறவே திருடர்கள் ஓட்டம் பிடித்ததாகவும் அவர்களைத்துரத்திப் பிடிக்க முயன்றும் முடியவில்லையென்றும் தெரிய வருகிறது.

## தயிர்முட்டி உடைத்தனர்

சுழிபுரம், வெள்ளி

தொல்புரம் வாலிபர்கள் தீபாவளித் தினத்தன்று தொல்புரம்மடத்துப்பிள்ளையார் கோவில்வீதியில் தயிர் முட்டி உடைத்தனர் மேள வாத்திய சகிதம் ஊர்வலமாக தயிர்முட்டி துரையன் வளவுப்பிள்ளையார் கோவிலிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது. பெருந்திரளான சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை மிகவும் குதூகலமாகப் போட்டிபோட்டு உடைத்தனர்.

## எதிரிகள் விடுதலை

ஊர்காவற்றுறை, வெள்ளி

புங்குடுதீவு வாசிகளான கே. பொன்னம்பலம், ரி. புஸ்பராசா, ஐ. சண்முகம் ஆகியோர் ஊர்காவற்றுறைப் பொலிசைச்சார்ந்த றிச்சட் றேசாரியோ என்பவரை புங்குடுதீவு கடற்கரையில் வைத்துத் தாக்கியதாகவும் அவரின் பைசிக்கிளையும், தொப்பியையும் திருடியதாகவும், அவரைக் கடமை செய்ய விடாது தடுத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் சாட்சியங்களின் முரண்பாடு காரணமாக மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## தாமதித்து வரும் ரயில்

காங்கேசன்துறை, வெள்ளி

யாழ்ப்பாணத்திலிருந்து மாலை 7 மணிக்கு காங்கேசன்துறை வரும் புகைவண்டி தினமும் சுமார் இரண்டு மணித்தியாலம் தாமதித்தே வந்து சேர்கின்றது. இதனால் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆஸ்பத்திரித் தொழிலாளர்கள் நேரத்திற்கு வீடு திரும்ப முடியாமல் கஷ்டமடைகின்றனர் இப்புகைவண்டிப் பெட்டிகளில் வெளிச்சம் இல்லாதிருப்பதால் இதில் பெண்கள் பிரயாணம் செய்ய முடியாது கஷ்டப்படுகின்றனர்.

## "விசாரணைக்கு முன்னர் கைதுசெய்வது அநாகரிகம்"

ஹட்டன், வெள்ளி

ஹட்டனிலுள்ள இலங்கைத் தொழிலாளர் கழகம் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கை வருமாறு:

வவனியாப் பகுதியில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள தோட்டப் பகுதியைச் சேர்ந்த பெருந்தொகையானோர் கள்ளக் குடியேற்றக்காரர்கள்என்று கைதுசெய்யப்பட்டுள்ளதாக வெளிவந்துள்ள செய்தி எமது கவனத்தை ஈர்ந்துள்ளது. கைதுசெய்யப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலோர் மலைநாட்டுத் தோட்டப்பகுதியிலிருந்து சென்றவர்கள் எனவும் தெரியவருகிறது.

தோட்டப்பகுதியில்வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதால் தோட்டப்பகுதிகளில் வேலை தேடிக் கொள்ள முடியாதவர்களும் தோட்ட நிர்வாகங்களால் 'ஒழுங்கு நடவடிக்கை' என்ற ரீதியில் வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பவர்களும் குடும்பங்களைப் பராமரிக்க வேறு வழியின்றி வவனியா, மன்னார், கிளிநொச்சி போன்ற பகுதிகளுக்குச் சென்று விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் கள்ளக் குடியேற்றக்காரர் என்று கைது செய்யப்பட்டிருப்பதன் மூலம் இவர்களும் இவர்களின் குடும்பங்களும் சொல்லொணு கஷ்டத்திற்களாகி, கடந்த காலங்களில் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் கள்ளக் குடியேற்ற முகாம்களில் அடைக்கப்பட்டு விசாரணைக்குப் பிறகு சட்டபூர்வமன பிரஜைகள் என்று நிரூபிக்கப்பட்டு விடுதலையாகியிருக்கிறார்கள். கைதுசெய்யப்படுவதற்கு முன்னர் விசாரணைகள் மேற்கொள்ளலாம். எனினும் அவ்வாறு செய்யப்படாதது அநாகரிகமாகும். விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களை இவ்வாறு இம்சைக்கு ஆளாக்குவதன மூலம் விவசாயத் தொழில் பாதிக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தோட்டப் பகுதியிலிருந்து 'ஒழுங்கு நடவடிக்கை' மூலம் வேலைநீக்கம் செய்யப்பட்டிருப்பவர்கள் விஷயத்தில் அவர்கள் தோட்டப்பகுதியில் வசித்தகாலத்தை நிரூபிப்பதற்குத்தேவையான அத்தாட்சிகளைக் கொடுத்துதவுவதற்கும் சில தோட்ட நிர்வாகங்கள் மறுத்து வருவதாகவும் தெரிகிறது.

தோட்டத் தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சகல தொழிற் சங்கங்களும் இதுபோன்ற பொதுவிஷயத்தில் கூட்டு நடவடிக்கைக்கு முன்வந்தால் இம்மாதிரி அசாதாரணமாக சட்டபூர்வமான நிரந்தரவாசிகள் இம்சிக்கப்படுவது தவிர்க்கப்படலாம்.

மன்னார் கச்சேரியில்

## பதிவுப் பத்திரமில்லாததால் வியாபாரிகள் தவிப்பு

மன்னார், வெள்ளி

கடந்த 6 மாதங்களாக மன்னார் கச்சேரியில் பதிவுப் பத்திரமின்மையால் வியாபாரிகள் பெரும் கஷ்டப்படுகின்றார்கள். புதிதாகத் திறந்த வியாபார ஸ்தாபனங்கள் தங்கள் தொழிலைப் பதிந்தபோதும், உறுதிப்பத்திரம் இன்று வரை அனுப்பப்படவில்லையாம். இதனால் பல தொழில்கள், கள்ளத் தொழில்களை போல் மதிப்பிழந்து விட்டதாக வியாபாரிகள் புகார் கூறுகின்றனர்.

கடைப் பதிவுப் பத்திரம் இன்மையால் கோட்டார் முறைப்படி பொருட்களைப் பெறமுடியாமலிருக்கின்றதாம்.

இதுபற்றிக் கச்சேரிக்குப் போகும் புகார்களுக்கு, 'நாங்கள் என்னசெய்வது, பதிவுப்பத்திரம் இன்னும் வந்து சேரவில்லையே!' என்று சமாதானம் சொல்லப்படுகின்றதாம்.

## எம். ஜி. ஆர்......

1-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுள்ளது இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் எம். ஜி. ஆரின் பரங்கிமலைத் தோட்டத்தில் இவ்வருடம் ஜனவரி 2ம் தேதி நடைபெற்றது. சென்னை சைதாப்பேட்டை சப் மாஜிஸ்திரேட் திரு. குப்புசாமி முன்னிலையில் முதலில் விசாரணை செய்யப்பட்ட இவ்வழக்கு பின்னர் சென்னை செஷன்ஸ கோர்ட்டுக்குபாரப்படுத்தப்பட்டது. சென்னைசெஷன்ஸ் கோர்ட்டில் நீதிபதி திரு. லக்சுமணன் இவ்வழக்கை விசாரணை செய்தார்.

ஜூலை 1-ம்திகதி தொடக்கம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இவ்வழக்கு 52 தின விசாரணைக்கு பின்னர் சென்றமாதம் 23.ம் திகதி முடிவடைந்தது.

இந்தவழக்கில் நடிகர் ராதாவைவிட எம்.ஜி. ஆரே கூடநேரம் வாக்குமூலம் அளித்திருக்கிறார். எம். ஜி. ஆர். ஆறுநாட்களும் எம். ஆர். ராதா 3 நாட்களும் வாக்குமூலம் அளித்தனர்.

## சைவசமயத்தை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சூழ்நிலையை உணர்ந்து செயலாற்றவேண்டும். போர்த்துக்கிசர், ஒல்லாந்தர் போன்ற அந்நியர் அழித்தொழித்த சைவ ஆலயங்களை மீண்டும் புனருத்தாரணம் செய்துவைக்க சைவசமயத்தவர் முன்வர வேண்டும்.''

மல்லாகம் இந்துசமய விருத்திச் சங்க 7வது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழா திரு. அ. சரவணமுத்து தலைமையில் மல்லாகம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது: ''சமய நெறியாக சமயக்கல்வி விளங்கவேண்டும். அநுபூதி அடிப்படையில் சமய நெறி பாதுகாக்கப்படவேண்டும். எல்லோரும் சாந்தமும் இன்பமும் பெற சமயம் உதவுகின்றது. போதனையுடன் மட்டும் இருந்துவிடாது சாதனைகள் மூலம் சிறார்களுக்குச் சமயக்கல்வி ஊட்டல்வேண்டும்.''

பிரம்ம ஸ்ரீ வ. குகசர்மா பேசுகையில், நீதி முறைகளை எடுத்து உரைப்பது புராணங்களாகும் எனக் கூறினார்.

திருமறை ஓதுதல், பேச்சுப்போட்டி ஆகியவற்றில் பரிசுகள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org